

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2052 கீழறை ஆண்டு துலை நல்லோரை ஐப்பசித் திங்கள் 3ம் நாள் (20-10-2021) நிறைமதி வெளியீடு +94 21 221 2739


## குமாரதாஸ் ஐயா விடைபெற்றார்



அருள்மிகு யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி திருக்கோயிலின் பத்தாவது நிர்வாகி இரகுநாத குமாரதாச மாப்பாணர் ஐயா 9-10-2021 அன்று சிவபதமடைந்தார்.

# எல்லாக் கடவுளரும் வணங்கி அருள் பெறும் பெருஞ்சிவனை அகத்தில் இருத்தி நாமும் வாழ்வில் வளம் பெறுவோம்

**"வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ , மனம் நின்பால் தாழ்த்துவதும் தாம் உயர்ந்து தம்மை எல்லாந் தொழ வேண்டியே"** என்று மணிவாசகர் திருவாசகத்தில் பதிவுசெய்துள்ளார். அதாவது அந்த வானவர்களும் சிவனைத் துதிப்பது, சிவனை தொழுவதால் தாம் உயர்வடைந்து தம்மை எல்லாரும் தொழுவார்கள் என்றேயாம்.

**அம்பாள் பூசை செய்தது காஞ்சிபுரம்**
**முருகன் பூசை செய்தது திருமுருகன் பூண்டி**
**பிள்ளையார் பூசை செய்தது கணபதீச்சரம்**
**பிரமா வணங்கியது பிரம்மபுரீசுவரம்**
**இராமர் வணங்கியது இராமேசுவரம்**
**கிருட்டிணர் வணங்கியது சீர்காழி**
**பரசுராமர் பூசை செய்தது திருப்பாச்சூர்**
**வாமணர் பூசை செய்தது திருமாணிக்குழி**
**மச்சன் பூசை செய்தது மச்சேசுவரம்**
**கச்சன் பூசை செய்தது திருக்கச்சூர்**

இப்படியாக எல்லோரும் சிவனை வழிபட்டுத் தான் பலன் பெற்றனர். அப்படியான சிவனை நீங்களும் வணங்கி, போற்றிப் பாடி வினைகளைக் களைந்து எல்லாச் சிறப்புகளுடனும் வையத்துள் வாழ்வாங்கு வாழ நெறிகாட்டும் எங்கள் சிவநெறியைப் பின்பற்ற வேண்டும்.

சிவன் அழித்தல் கடவுள், சிவன் சிலையை, சிவ இலிங்கத்தினை, நடராசர் சிலையை வீட்டில் வைக்கக் கூடாது என்று பயங்காட்டி, பன்னெடுங்காலமாய் சைவநெறி அழிக்கப்பட்டு வந்திருக்கிறது. அத்துடன் தமிழரின் அடையாளமும் சேர்ந்து அழிக்கப்பட்டிருக்கிறது என்பதனை உணர்ந்து, நாங்கள் மீண்டும் எங்கள் பரம்பொருளாம் சிவத்தினை வழிபடும் நெறியாகிய சைவ நெறியை மீண்டும் புத்துயிர் பெறச்செய்யவேண்டும்.

ஒரு நாளிலே அதாவது இருபத்துநான்கு மணிகளில் இரவுபகல் வருவது போல், வாழ்விலும் இன்ப துன்பங்கள் மாறி மாறித்தான் வரும். இப்படி இருக்கையில் துன்பங்கள் வரும்போது துவண்டு,



உங்கள் கடவுள் என்ன செய்கிறார் என்று கயவர்கள் கேட்க, வினை நீங்கும் தேவார திருவாசகத்தினை ஓதி மீளாமல் நெறிமாறுவது நள்ளிரவில் ஐயோ சூரியனைக் காணோம் என்று பயந்து தூக்கில் தொங்குவது போன்றது. நான்மறைச் செம்பொருள் வாய்மை வைத்த சீர்திரு தேவாரமும் திருவாசகமும் உய்வைத் தரச்செய்த நால்வர்பொற்றாள் எம் உயிர்த்துணையே என்பதற்கு இணங்க திருமுறைகளை ஓதி துன்பங்களில் இருந்து விடுபட்டு, வினைகளைக் குறைத்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோம்.

## ஐப்பசித் திங்கள் நிறைமதி அன்று [அக் 20 புதன்] ஐம்பூதநாதருக்கு அன்னமுழுக்கு



ஐப்பசித் திங்கள் 3ம் நாள் (அக்டோபர் 20, புதன்) நிறைமதி நன்னாளன்று பாரிடை ஐந்தாய்ப் பரந்து, நீரிடை நான்காய் நிகழ்ந்து, தீயிடை மூன்றாய்த் திகழ்ந்து, வளியிடை இரண்டாய் மகிழ்ந்து, வெளியிடை ஒன்றாய் விளைந்து நிற்கும் எல்லாம் வல்ல பரம்பொருளாம் சிவப்பரம் பொருளுக்கு எல்லாக் கோயில்களிலும் அன்னமுழுக்கு இடம்பெறும்.

கல்லுள்த் தேரைக்கும், கருவுள் சிசுவிற்கும், சகல உயிரினங்களுக்கும் உணவளிக்கின்ற சிவபெருமானைப் போற்றிப் புகழ்ந்து நன்றி செலுத்தும் முகமாக ஐப்பசி நிறைமதி தினத்தில் அன்ன முழுக்கு மற்றும் அலங்காரம் சாத்துப்படியாக வைத்து சிவனின் போற்றிப் பாடல்கள் பாடுவது சாலவும் சிறந்தது.

**அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்**
**பொன்னம் பாலிக்கும் மேலும் இப்பூமிசை**
**என்னம் பாலிக்கு மாறுகண்டு இன்புற**
**இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே**

என்று ஐந்தாம் திருமுறையையும் ஓதி பரம்பொருளிடம் மீண்டும் பிறப்பில்லா பேரின்பப் பெருவாழ்வினை வேண்டுவோம்.

## தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் செந்தமிழ் ஆகம அர்ச்சகர் சான்றிதழ் நெறி துவக்கம்

### பயிற்சி பெறும் இருவர் பிரித்தானியா பயணம்



யாழ்ப்பாணம் கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினால், செந்தமிழ் ஆகம அர்ச்சகர் நெறிக்கான சான்றிதழ் பயிற்சி நெறி புரட்டாசி 20ம் நாள் தென்னாடு மடத்தில் வதிவிடக்கற்கை நெறியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. தமிழ்மறை சைவ ஒடுக்க முறைகள், செந்தமிழ்ப் பூசை முறைகள், திருமுறை ஓதல், மாலை கட்டுதல், சாத்துப்படிப் பயிற்சி மற்றும் உழவாரப் பணி என்று சிவ வழிபாட்டிற்கு தேவையான முறைமைகளை உள்ளடக்கிய வதிவிடக்கற்கை நெறியாக வடிவமைக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

இதில் பயிற்சி பெறும் இருவர் பிரித்தானியாவில் உள்ள தமிழ் ஆகமக் கோயில் பூசை மற்றும் பிரித்தானியாவில் தமிழ் வாழ்வியல் சடங்குகளை முன்னெடுப்பதற்காக லண்டன் செல்லவுள்ளனர். இவ்வாறு புலம்பெயர் தமிழரின் தமிழ்க் கோயில்களில் செந்தமிழ் பூசைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு ஆகம முறையில் பயின்ற, சிவநெறியில் ஒழுகும் செந்தமிழ் ஆகம அர்ச்சகர்களை வரவழைத்து சைவத்தமிழை, எங்கள் தாய்மொழி வழிபாட்டின் மகிமையை உலகறியச் செய்யவேண்டும்.

# சத்தி வழிபாடு

சிவ வழிபாட்டின் இன்னோர் பெருங்கூறு சத்தி வழிபாடு என்றே கூறலாம். எல்லாம் வல்ல சிவப்பெரும் பொருளை மாதொருபாகனாகவே சைவம் வழிபடுகின்றது. சிவ சத்தி இணைப்பின் தன்மையே, அணு முதல் அண்டம் வரையான அனைத்தும் என்பது சைவத்தின் பேருண்மை.

**“சத்தி சிவன்தன் விளையாட்டுத் தாரணி**
**சத்தி சிவமும்ஆம் சிவன் சத்தியுமாகும்**
**சத்தி சிவம்அன்றித் தாபரம் வேறில்லை**
**சத்தி தான்என்றும் அமைந்து உருஆகுமே”**

இது திருமூலரின் ஓர் பாடல், சிவ சத்தியின் விளையாட்டே இந்த உலகம், அண்டம், உயிர்கள் என்றும் சத்தியுள் சிவமும் சிவத்துள் சத்தியும் அடங்கும் என்றும், அந்த சத்தியானது பல்வேறு வடிவங்களைப் பெற்று அருள் புரியும் என்றும், பறைசாற்றிப் போகின்றார் திருமூலர். இப்படிப்பட்ட சத்தியை நோக்கி வழிபாடு இயற்றும் நாட்களே **‘ஒன்பானிரவு நோன்பு’** ஆகும். இதை நவராத்திரி என்றும் அழைப்பார். தமிழர் தம் மெய்யியலில் பெண்சார் வழிபாடு தவிர்க்கவோ, மறுக்கவோ முடியாத விடயம். சங்ககாலக் கொற்றவை, தவ்வை வழிபாடு முதற்கொண்டு கிராமியத் தெய்வப்பெண் வழிபாடு வரை நீளுகின்றது. குறிப்பாக ஈழத்திலும் நாக அம்மன், நாகபூசனி போன்ற பெண் தெய்வ வழிபாடுகள் சிறப்புற்றுத் திகழ்கின்றன. அத்தகு பெண் தெய்வ வழிபாட்டின் நீட்சியே சத்தி வழிபாடு எனவும் கொள்ளலாம்.

சத்தியை நோக்கி இயற்றப்படும் நோன்புகளில் மிகவும் சிறப்பு வாய்ந்தது ஒன்பான் இரவு விரதம் ஆகும். மனிதனுக்கு அவசியமான ஆற்றலின் வடிவமாய் விளங்குகின்ற சத்தியைப் போற்றும் நோன்பாக இந்நோன்பு கடைப்பிடிக்கப்படுகின்றது. புரட்டாசித் திங்கள் மறைமதி நாளுக்கு அடுத்த நாள் முதல் ஆரம்பமாகி ஒன்பது நாட்கள் வரை நோற்கப்படும் நோன்பாக இது திகழ்கின்றது. ஒன்பது வகையான கூலங்களை (தானியங்கள்) முளைக்கவிட்டு, நிறைகுடம் வைத்து அதை இறைவியாகக் கருதி வழிபடுவர்.

குறிப்பாக அபிராமி அந்தாதி, சகலகாலாவல்லிமாலை போன்ற தீந்தமிழ்ப்பாடல்களினால் இக்காலத்தில் மிகவும் பத்தியுடன் இறைவியை வழிபடுவர்

**வெண்தாமரைக்கு அன்றி நின்பதம்தாங்க என்வெள்ளைஉள்ளத் தண்தாமரைக்குத் தகாதுகொலோ? சகம்ஏழும் அளித்து உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும்வண்ணம் கண்டான் சுவைகொள் கரும்பே சகலகலாவல்லியே**

எனத்தொடங்கும் குமர குருபரரின் கலைமகள் மீதான பாடலும்,



**“உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம், உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை துதிக்கின்ற மின் கொடி, மென் கடிக் குங்குமத் தோயமென்ன விதிக்கின்ற மேனி அபிராமி எந்தன் விழுத்துணையே”**

எனத்தொடங்கும் அபிராமி அந்தாதியும் ,

**“மூவுலகும் இடறியற்றும் அடலவுணர்**
**உயிரொழிய முனிவு கூர்ந்த**
**பூவையுறழ் திருமேனி அருட்கடவுள்**
**அகன்மார்பில் பொலிந்து தோன்றித்**
**தேவர் உலகினும் விளங்கும் புகழ்க் கொல்லா**
**புரத்தினிது சேர்ந்து வைகும்**
**பாவையிரு தாழ்தொழுது பழமறைதேர்**
**குறுமுனிவன் பழிச்சுகின்றான்”**

எனத் தொடங்கும் அகத்தியரின் அலைமகள் மீதான பாடலும், இக்காலத்தில் பாடப்படும் பாடல்களாகக் காணப்படுகின்றன.



**சிவத்திரு யாழவன் சிவவேதன்**

இவை தவிர திருமுறைப்பாடல்கள் மற்றும் திருப்புகழ் போன்றவையும், இக் காலத்தில் சிறப்பாக பாடப்படுகின்றன. ஒன்பானிரவு வெறும் நோன்பாக மட்டுமல்ல, ஒரு வாழ்வியல் சடங்காக எம் மண்ணுடனும் மக்களுடனும் பின்னிப்பிணைந்துள்ளது. ஏடு தொடக்குதலில் இருந்து ஏர் உழுதல் வரை இக்காலத்தில் இடம்பெறும் சிறப்பு வாய்ந்த விடயங்களாகக் காணப்படுகின்றன. கிராமங்கள் மற்றும் பாடசாலைகள் தோறும், இக்காலத்தில் கலைவிழா, மற்றும் அவை சார்ந்த விழாக்கள் இடம்பெற்று மாணவர்கள் மற்றும் மக்களிடையே சைவம் மற்றும் கலை சார்ந்த விடயங்கள் தெளிவுபடுத்தப்படுகின்றன. ஒன்பானிரவு நோன்பு காலப்பகுதி என்றாலே பெரும்பாலான பாடசாலைகளும், கிராமங்களும், கிராம மன்றங்களும், விளையாட்டுக் கழகங்களும் களைகட்டி விடும். திருமுறை முற்றோதல், சைவ சொற்பொழிவுகள் என பலதரப்பட்ட நிகழ்ச்சிகளும் செழிப்புற நடைபெறும். சைவம் கூறும் சிவத்தின் இன்னோர் பாதியாகிய சத்தியை வெவ்வேறு வடிவங்களில் வைத்து வழிபடும் உன்னத காலமே இந்த ஒன்பானிரவு வழிபாடு என்றும் சொல்லிப் போகலாம்.

ஆனால் தற்போது பரவி வரும் தீநுண்மிப்பரவல் காரணமாக இந்நோன்பும் பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளது. கலைவிழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், சைவம் சார் விழிப்புணர்வுகளை நடத்தமுடியா சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றே சொல்லலாம். இன்னும் தெளிவாக சொல்ல வேண்டும் எனில் ஒன்பானிரவு தன் சிறப்பை சற்று இழந்து விட்டது என்றே சொல்லலாம். இதுவும் கடந்து போகும் என்று மனதை தேற்றி நகர வேண்டியது தான். இருப்பினும் வீடுகளில் சத்தியை நினைத்து வழிபடுவோம். சகலகலாவல்லிமாலை, அபிராமி அந்தாதி, மற்றும் திருமுறைகள் போன்றவற்றால், எல்லாம் வல்ல இறைவியை வழிபடுவோம். தீ நுண்மியால் வெளிப்புற உலகை தான் கட்டுப்படுத்த முடியுமே தவிர எம் உட்புற பத்தியையோ, இறை உணர்வையோ, அதனால் ஒன்றும் செய்ய முடியாது. அடுத்த முறையாவது இவ்வழிபாட்டை சிறப்புடன் வழிபட எல்லாம் வல்ல இறைவியையும் இறைவனையும் பிரார்த்திப்போம்.

**சிவத்துள் சத்தியும் சத்தியுள் சிவமும் இரண்டற நின்ற பேரெழில் போற்றி வழிபடுவோம்.**

**திருச்சிற்றம்பலம்**

# தோடுடைய இறைவி

சைவத்தையும் தமிழையும் மீட்கப்பிறந்த தமிழ்ஞான சம்பந்தர் தனது மூன்று வயதில் அம்மையே அப்பா என்று அழைத்ததும், தென்னாடு உடைய ஈசன் இறைவியுடன் காட்சி நல்கினார். மாதொரு பாகனாகிய ஈசனின் இடப்பாகத்தில் திடமாய் உறைந்த இறைவியுடன் ஈசனைக் கண்ட அக்குழந்தை அழுகையைத்தணித்து, சிரித்தது. தாயன்பு சொட்ட அக்குழந்தைக்குப் பாலூட்டினாள் இறைவி. பேரறிவு பெற்ற அக்குழந்தை தனது வாயினால், தேன் சொட்டும் தமிழில் திருமுறையை ஓத ஆரம்பித்தது. தமிழ் மறையின் முதலாம் திருமுறையின் முதல்ப்பாடலின் முதல்வரி **‘தோடுடைய’** என்று ஆரம்பிக்கின்றது. ஈசனின் பாகமாய் அமர்ந்த சத்தியின் தோட்டில் இருந்து ஆரம்பிக்கும் திருமுறை தீந்தமிழ்ப்பாக்களாக நீண்டு செல்கின்றது. அத்தகு பெருமையுடையவள் சத்தி. திருமுறையின் ஆரம்பத்திற்காக தனது தோட்டையே கொடுத்தாள் சத்தி.

**“தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக் காடுடையசுட லைப்பொடிபூசிஎன் உள்ளங்கவர் கள்வன் ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தஅருள் செய்த பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே”**

திருக்கடவூரில் தனது அடியவனின் அன்புக்காய் ஈசன் கூற்றுவனை உதைத்துத்தள்ளிய போது, கூற்றுவன் மீது விழுந்தது ஈசனின் இடக்காலே. இடப்பாகம் அமர்ந்த சத்தியே உதைத்துத் தள்ளினாள் என்றும் சொல்லலாம். அதே திருக்கடவூரில் மீண்டும் ஒரு அதிசயம் நடந்தது. அன்று ஒரு மறைமதி நாள். அபிராமிப்பட்டர் எனும் அடியவர் அன்று அக்கோயிலில் தியானத்தில் ஆழ்ந்திருந்தார்.

இவர் அபிராமியின் மீது கொண்ட அளவு கடந்த பத்தியினால் மனத்திலே இறைவியை ஒளி வடிவில் கண்டு பேரானந்தத்தில் ஆழ்ந்திருந்தார். இந்த முத்தி நிலையில் பித்தர் (பைத்தியம்) போலவும் பேதையர் (அறிவில்லாதவர்) போலவும் உலகப் பற்றின்றி எந்த நேரமும், கடவுளுடன் ஒன்றி இருந்த பட்டரை யாரும் புரிந்து கொள்ளவில்லை. ஏதோ மனப்பைத்தியம் பிடித்து அலைபவர் என்றே எண்ணித் தூற்றினார்கள். போக்கன், அறிவற்றவன் என்றே மக்கள் கணித்து விட்டார்கள் .

அக்காலத்தில் தஞ்சையை தலைநகரமாக கொண்டு, மராட்டிய பரம்பரையை சேர்ந்த, சரபோசி என்ற மன்னர் ஆண்டு வந்தார். அவர் தெய்வ பத்தியும், இறைப்பற்றும் உடையவர். அவர் அதே மறைமதி தினத்தில் அமுதகும்ப நாதரையும் அபிராமி அன்னையையும் வழிபட வேண்டும் என்ற விருப்புடன் திருக்கடவூரை அடைந்தார்.

மன்னர் கோயிலை அடைந்தபோது, மக்கள், பூசகர், அடியவர் எல்லோரும் இறைவனை விடுத்து, மன்னனை வணங்கினர். ஆனால் அபிராமிப் பட்டர், அபிராமி அம்மையை நினைந்து, தியானத்தில் மூழ்கி, இந்த உலக நினைவுகள் ஏதுமின்றி, அமர்ந்து இருந்தார். மன்னர் வருவதைக்



கூட கவனிக்காது, பட்டர் இருப்பதை கண்டு மன்னர் வியந்தார். பட்டரின் இறையுடன் ஒன்றி நின்ற தோற்றமும், ஒளி வீசும் முகமும், தியான நிலையில் ஆழ்ந்திருந்த கண்களும் அரசனை கவர்ந்தன. அருகிலிருந்தவர் ‘பத்தர்’ என்றனர் பலர் ‘பித்தர்’ என்று தூற்றினர். பட்டரை தூற்றி திரிந்தவர்கள் மன்னரிடம், “மன்னா! உங்களுக்கு தர வேண்டிய மரியாதையை தராமல் கண்மூடி இருக்கிறார் பட்டர். எந்நேரமும் இப்படித் தான் இருப்பார். இவர் ஒரு பைத்தியம்” என்று குறை கூறினர்.

அதைக் கேட்ட மன்னர் உள்ளே சென்று அம்பிகையை வழிபட்ட பின்னர். திரும்பி வரும்போது பட்டரோடு கதைத்தே தீர வேண்டும் என்ற எண்ணத்தில், “பட்டரே, இன்று என்ன நாள் ?” என்று கேட்டார். கண் மூடிய நிலையில், அன்னையைத் தன் மனக்கண்ணில் கண்டு களித்துக் கொண்டிருந்த பட்டர் சற்றும் தாமதியாது, நிறைமதி என்றார்.

மன்னருக்கு அவமானமாய்ப் போய் விட்டது. பைத்தியக்காரன் என்று மக்கள் சொன்ன பிறகும் இவரோடு கதைத்து, இப்படி அவமானப்பட்டு விட்டோமே என்று கோபம் பொங்கி வந்தது. கோபத்தை அடக்கிய வண்ணம் “அப்படியென்றால் இன்று இரவு நிலவு வருமா?” என்று அடுத்த கேள்வியை மன்னர் கேட்டார். மன்னர் கேட்க, “நிச்சயம் வரும்” என்று கண்மூடிய நிலையில் பதில் சொல்லி விடுகின்றார் பட்டர். “வராவிட்டால் உனக்கு மரண தண்டனை” இது அரச கட்டளை என்று கோபத்தில் கூறி விட்டு மன்னர் சென்று விடுகிறார்.

மெல்ல மெல்ல கண் விழித்து தன்னிலை அடைந்த பட்டர், நடந்ததை அறிந்து சூழ்நிலையின் தீவிரத்தைப் புரிந்து கொண்டு, அன்னையிடம் ஓடினார். தாயே! உன்னையே எண்ணி எண்ணி பித்தாகிப் போன உன் மகனுக்கு நீ தரும் பரிசு இதுதானா? பிள்ளையைக் காக்க வேண்டியது தாயின் கடமை. இன்றிரவு வானில் முழுநிலவு வர வேண்டும். வராவிட்டால் என் உயிர் பிரியும் என்று கூறி, கோயில் திருச்சுற்றில் குழிவெட்டி நெருப்பு மூட்டினார். மேல் விட்டத்திலிருந்து நூறு ஆரங்கள் கொண்ட உறியைத் தொங்கவிட்டு, அதில் ஏறி அமர்ந்தார். ‘உதிக்கின்ற செங்கதிர்’, என்று அன்னையைத் தியானித்து அந்தாதி பாடத் தொடங்கினார். ஒவ்வொரு பாடல் முடிந்ததும் ஒவ்வொரு கயிறாக அறுத்துக்கொண்டே வந்தார். மாலையும் வந்தது. பொழுது சாய்ந்தது் பட்டர் பல பாடல்கள் பாடியும் அம்பிகையின் அருள் கிடைக்கவில்லை. பட்டரின் நம்பிக்கை குறையவில்லை! மறைமதி நாள் ஆகையால் வானம் இருண்டு கிடந்தது. அபிராமி அந்தாதியின் எழுபத்து ஒன்பதாவது பாடலை பட்டர் பாடத்தொடங்குகின்றார்.

**“விழிக்கே அருள் உண்டு, அபிராம வல்லிக்கு் வேதம் சொன்ன வழிக்கே வழிபட நெஞ்சு உண்டு எமக்கு் அவ்வழி கிடைக்க, பழிக்கே சுழன்று, வெம் பாவங்களே செய்து, பாழ் நரகக் குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு, என்ன கூட்டு இனியே?”**

என்ற பாடலைப் பாடி முடித்ததும், அன்னை அபிராமி அவரது மனதில் பெருங்காட்சி கொடுத்தாள். எந்தத் தோட்டை திருமுறைக்காகக் காட்டி ஆரம்பித்து வைத்தாளோ, அதே தோட்டை எடுத்து வானில் வீசி எறிகின்றாள். திருமுறையை ஆரம்பித்து வைத்த அந்தத் தோடு, நிறைமதியாக வானில் மின்னியது.

அவள் பட்டரிடம் “நீ வாய் தவறி மன்னனிடம் கூறிய சொல்லையும் உண்மை என நிரூபித்தேன். நீ தொடங்கிய அந்தாதியை தொடர்ந்து பாடு”, என்றாள். அன்னை அருள்பெற்ற அபிராமிப்பட்டர் மகிழ்ச்சி அடைந்து, முழுப்பாடலையும் பாடி முடித்தார். இது தான் இறைவியின் அருள். தந்தை எம் மீது கோபமாக உள்ளபோது கூட தாய் எமக்காக பரிந்து பேசுவாள். அத்தகு தாயின் வழிபாட்டுக்கு உரிய காலமாகிய ஒன்பானிரவு காலத்தில் திருமுறைகளையும் அபிராமி அந்தாதியையும் ஓதி அம்மை உடனுறை அப்பனை வழிபடுவோம்.

**ஓம் சகலகலா வல்லியே!.**

**திருச்சிற்றம்பலம்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்

## அருள்மிகு மயிலம்மை உடனுறை மயிலைநாதர் (மயூரநாதசுவாமி) திருக்கோயில் - மயிலாடுதுறை

## தேவாரப் பாடல் பெற்ற சிவபுரங்களில் 156வது திருக்கோயில்



இத்தலத்தில் உள்ள இறைவன் இறைவியை வழிபட்டுத் தேவாரப் பதிகங்களைப் பாடி வந்தால், முப்பிறப்பிலும் இப்பிறப்பிலும் செய்த தீவினைகள் அகன்று செல்வவளம் பெறுவார்.

**திருத்தல அமைவிடம்: (நாகப்பட்டினம் மாவட்டம் - தமிழ்நாடு)**

இத்தலமான அருள்மிகு மயிலம்மை உடனுறை மயிலைநாதர் திருக்கோயில் நாகப்பட்டினம் மாவட்டத்தில், மாயவரம் என அழைக்கப்பட்ட மயிலாடுதுறையில் உள்ளது. இவ்வூர் சிதம்பரத்தில் இருந்து 42 கி. மி தொலைவிலும், கும்பகோணத்தில் இருந்து 35கி. மி தொலைவிலும் அமைந்துள்ளது. இந்த சிறப்புமிகு மயிலாடுதுறையில் இருந்து, ஒன்பான்கோள்த்(நவகிரக) தலங்கள் சென்று வருவது சுலபம்.

### திருத்தலச் சிறப்பு

இத்தல இறைவன் தான்தோன்றி இறைவனாகத் திகழ்கின்றார். மயிலாடுதுறையில், திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான ஐயாறப்பர் கோயிலில் நிகழும் எழுதலத் (சபஸ்த்தான) திருவிழாவில் பங்குபற்றும் ஏழுசிவன் கோயில்களில் இக்கோயிலும் ஒன்றாம்.

### பங்குபற்றும் மற்றைய கோயில்கள்:

– அறம் வளர்த்த நாயகி உடனுறை ஐயாறப்பர் கோயில்
– உறைநாடு சாந்தநாயகி உடனுறை புனுகீசுவரர் கோயில்
– மூவாயிலூர் மங்களநாயகி, எழில் நாயகி உடனுறை வழித்துணைநாதர்( மார்க்க சகாய சுவாமி) கோயில்
– சூலம் பேட்டை அறம் வளர்த்த நாயகி உடனுறை அழகியநாதர் கோயில்
– துலாக் கட்டம் காசி விசாலாச்சி உடனுறை காசி விசுவநாதர் கோயில்
– சித்தர்காடு திரிபுரசுந்தரி உடனுறை பிரம்மபுரீசுவரர் கோயில் என்பனவாம்.

இத்தலத்தின் தீர்த்தமான காவேரித்துறையில் துலாநீராடல் என்பது சிறப்புக்குரியது. ஐப்பசித் திங்கள் முதலாம் நாள் தொடங்கும் இத்துலாநீராடல் தொடர்ந்து முப்பது நாட்கள் நிகழ்ந்து நிறைவுறும். அவ்வது சமயம் அடியார்கள் யாவரும் காவேரித் தீர்த்தத்தில் துலாநீராடி தங்கள் ஏழுபிறப்பிலும், இப்பிறப்பில் செய்திட்ட தீமைகளை இறையருளால் அழித்து, நற்பயனை அடைவர் என்பது நம்பிக்கை. ஆதலால், இத்தலத்தின் சிறப்பிற்குரிய நிகழ்வாக துலாநீராடல் நிகழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான துலாநீராடலிற் பங்கு பற்றி தங்களது பாவத்தினைத் தீர்த்தற் பொருட்டு, வடபுலத்திலிருந்து, நாதசர்மா என்பவரும், அவரது மனையாள் அனவித்தி யாம்பிகை என்பவரும், மயிலாடுதுறைக்கு வந்து கோயிலை அடைந்தனர். அவ்வது சமயம் அன்றுடன் துலாநீராடல் நிறைவடைந்துவிட்டது. அச்செய்தியை அறிந்திட்ட அவ்விணையர் மிகுந்த துயருற்று, தங்களது தீதிற்குக் கழுவாய் ஏதுமற்றுப் போய்விட்டே, என மனத்துயருற்று வருந்தினர். அன்று இரவாகிவிட்டபடியினாலே கோயிலிலேயே தங்கிவிட்டு மறுநாள் காலை தங்களது ஊருக்குப் புறப்பட்டுச் செல்லலாம் என எண்ணம் கொண்டிருந்தனர். பின்னர் இறைச் சிந்தையுடனேயே நித்திரைக்குச் சென்றனர்.

அன்று இரவு நாதசர்மாவின் கனவிலே சிவபெருமான் தோன்றி, இன்று கதிரவன் தோன்றும் முன் நீங்கள் நீராடலாம். கதிரவன் தோன்றிய பின்பே துலாத் திங்கள் நிறைவுறும். ஆகவே நீங்கள் இத்தீர்த்தத்தில் நீராடி உங்களது தீமைகளை நீக்கிக் கொள்ளலாம் எனக் கூறினார். கனவிலிருந்து மீண்ட நாதசர்மா இறைவனைத் தொழுது வணங்கி, தனது மனைவியுடன் அன்று கதிரவன் தோன்றும் முன் நீராடினர். இதனால் அவர்கள் முன்பு, எழுமையில் செய்த தீமைகள் எல்லாம் அழிந்தன. இன்றளவும் இம்முழுக்கானது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதனை முடவன் முழுக்கு என்று மக்கள் அழைக்கின்றனர். மயிலாடுதுறைப்பதியிலே வாழத்தலைப்பட்ட நாதசர்மாவும் அவரது மனைவியும் பல நற்பணிகளை மேற்கொண்டு, தொழுது வாழ்ந்து, வீடுபேற்றை அடைந்தனர். இதனால் இறைவனது அருள்கிட்டி, அவர்கள் இருவரும் நாதலிங்கம், அனவித்தியாலிங்கம் எனவும் திருக்கோயிலில் விளங்குகின்றனர். இவ் இலிங்கத் திருமேனிக்கு இன்றளவும் சேலை கட்டியே வழிபாடு நிகழ்த்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

இத்தலத்திற்கு முதலாம் பரந்தக சோழன், கண்டராதித்திய சோழன், சுந்தர சோழன், முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், சடையவர்மன் சுந்தர பாண்டியன் முதலானோர் திருப்பணிகளைச் செய்துள்ளனர். பல கல்வெட்டுக்கள் இக்கோயிலில் இருந்த போதும் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களாகப் பதினாறு கல்வெட்டுக்களேயுள்ளன. இப்பதினாறு கல்வெட்டுக்களிலும் பல கொடைச் செய்திகள் விளக்கப்பட்டனவாக உள்ளன.

இத்தலத்தின் இறைவன் திருப்பெயர் ‘திருமயிலாடுதுறை உடையார்’ என தமிழிலேயே பதியப் பெற்றுள்ளமை குறிப்பிடதக்கதாகும். இப்பதினாறு கல்வெட்டுக்களிலும் ஐந்து கல்வெட்டுக்களே, இக்கோயில் குறித்த செய்திகளைத் தெரிவிப்பதாக இருக்க. மற்றைய பதினொறு கல்வெட்டுக் களும் அருகிலுள்ள ஐயாறப்பர் கோயில் பற்றிய செய்திகளைக் கூறுவனவாக உள்ளன. இக்கோயிலானது மயிலாடுதுறை உடையார் கோயிலுக்கு தென்மேற்குத் திசையில் உள்ளதாகும். மேலும் இக்கோயிலே, மயிலாடுதுறை உடையார் கோயில் உள்ளிட்ட ஏழு கோயில்களுக்கும் தலைமைக் கோயிலாக அமைகின்றது. துலா நீராட்டின் போதும், பெருந்திருவிழாவின் போதும், ஐயாறப்பர் கோயில் தலைமையிலே, மயிலாடுதுறை உடையார் கோயில் உட்பட்ட ஏழு கோயில்களின் திரு மேனிகளும் எழுந்தருளுவர் என்பது குறிப்பிடதக்கதாகும். இக்கோயில், ஐயங்கொண்ட சோழவளநாட்டுத் திருவழுந் தூர் நாட்டு குலோத்துங்க சோழன் குத்தாலமாகிய திருவை யாறுடையார் என்றிருப்பதாகக் குறிக்கப்பெறுகின்றது.

இத்தலத்தின் பெருமைகளை பல சான்றோர்கள் போற்றிப் பாடியுள்ளனர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், அருணகிரிநாதர், வள்ளலார், மகாவித்வான், ஆதியப்ப நாவலர், வேதநாயகம் பிள்ளை, உ.வே.சா. மாரிமுத்தாப் பிள்ளை, முத்துத்தாண்டவராயர், அருணாசலகவிராயர், முத்துசாமி தீட்சிதர், மகாகவி காளமேகப் புலவர், கோபாலகிருஷ்ண பாரதி, புலவர் இராமையர், துரைசாமி பிள்ளை, கிருஷ்ணசாமி ஐயர், சிதம்பர சுவாமிகள் ஆகியோரால் போற்றப்பட்டத் தலம். பொன்னியின் செல்வன், சிவகாமி சபதம், பார்த்திபன் கனவு போன்ற வரலாற்று சிறப்பு மிக்க நூல்களிலும், தனது கல்கி பத்திரிகையிலும் இவ்வூரின் சிறப்புகளைப் பற்றிக் கூறியுள்ளார் திரு கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள். இவர் இவ்வூரில் வாழ்ந்த பெருமை கொண்டவர்.







திரு. உ..வே. சாமிநாதய்யர் அவர்களும் இவ்வூரில் வாழ்ந்தவர். மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் மாணவராக திருவாவடுதுறையிலும், மயிலாடுதுறையிலும் வாழ்ந்தவர். இவர் இல்லையென்றால் தமிழில் தோன்றிய காவியங்களை நம்மால் கண்டு படித்திருக்க முடியாது. அக்கால சுவடிகளைக் கண்டறிந்து, சேகரித்து, ஐம்பெரும் காப்பியங்களை தொகுத்து, அச்சில் ஏற்றியவர் இவர்.

இத்தலத்து சித்தராகப் போற்றப்பட்டவர் நல்லத்துக்குடி கிருஷ்ணசுவாமி ஐயர். இத்தலத்து இறைவி மயிலம்மையைப் போற்றி, 100 பாடல் தொகுப்புகளைக் கொண்ட அபயாம்பிகை சதகம், இவரால் பாடப்பட்டது.

**இறைவன் திருப்பெயர்:** மயிலைநாதர், வள்ளலார், திருமயிலாடுதுறை உடையார்

**இறைவி திருப்பெயர்:** அஞ்சொல் நாயகி, மயிலம்மை

**கோயிற் திருக்குளம் :** காவிரித் திருக்குளம், இடபத் திருக்குளம், அகத்தியத் திருக்குளம்

**கோயில் மரம் :** மாமரம், வன்னி

**வழிபட்டோர் :** கங்கை, கௌரி, இந்திரன், நான்முகன், வியாழன், அகத்தியர், நாதசர்மா - அனவித்தை, திலீபன், எழுமங்கயர், எண்திசைக்காவலர் மற்றும் பலவகையான விலங்குகளும், தேவர்களும் வழிபாடு செய்துள்ளனர்.

**பாமாலை:** திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், அருணகிநாதர்

தலத்தின் மீது தேவார முதலிகளால் பாடப்பட்ட திருப்பதிகங்கள்

### திருஞானசம்பந்தர் பாடியத் திருப்பதிகம்

**“கரவுஇன் றிநன்மா மலர்கொண்டு**
**இரவும் பகலும் தொழுவார்கள்**
**சிரம்ஒன் றியசெஞ் சடையான் வாழ்**
**வரவா மயிலாடு துறையே!! “**

### திருநாவுக்கரசர் பாடியத் திருப்பதிகம்

**“நிலைமை சொல்லு நெஞ்சே தவம் என் செய்தாய்**
**கலைகளாய வல்லான் கயிலாய நன்**
**மலையன் மாமயிலாடுதுறையன் நம்**
**தலையின் மேலும் மனத்துள்ளும் தங்கவே”**

### திருத்தல வரலாறு

தச்சன் நடத்திய யாகத்தில் சிவனின் சொல் மறுத்து, அம்மை கலந்து கொள்கின்றாள். அந்த யாகத்தினைத் தடுத்தற் பொருட்டு, சிவன் வீரபத்திரரை ஏவி அந்த யாகத்தினை அளித்தார். யாகத்தில் அழியாது தப்பிய மயிலுக்கு, அம்மை அடைக்கலம் கொடுத்துக் காத்தார். தனது சொற்படி நடவாமையால் சிவன் அம்மையை மயில்வடிவு பெறக் கடவினார். மயில் வடிவம் பெற்ற அம்மை மயிலாடுதுறை அடைந்து, இத்தலத்திலே தவம் நோற்றாள். அம்மையின் தவத்தால் அகம் குளிர்ந்த சிவனார் மயில்வடிலேயே அம்மையைக் காண வந்தார். சிவன் தனது நடனக் காட்சியை அம்மைக்கு காட்ட, அம்மை தனது உண்மை வடிவத்தினைப் பெற்றாள். இந்நடனத்தினை மயிலதாண்டவம் (மயூரதாண்டவம்) என்பார். இத்தலத்தில், இறைவனின் இலிங்கத்திருமேனியின் முன்பு மயில்வடிவவில் அம்மை வழிபடுவதாகக் கருவறை அமைத்துள்ளது.

அனைவரும் தாம் செய்த பாவங்களைக் கங்கையில் நீராடி போக்கிக் கொண்டனர். இதனால் அப்பாவங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து கங்கையின் உருவையே மாற்றிவிட்டன. கங்கை தன் நிலையை இறைவனிடம் தெரிவிக்க, கங்கை தனது பழைய உருவம் கிடைக்க வேண்டுமென்றால் ஐப்பசித் திங்கள் கடைசி நாள் காவிரி இடபத் திருக்குளத்தில் மூழ்கி எழவேண்டும் எனக் கூறினார். கங்கை காசியில் இருந்து மயிலாடுதுறை நோக்கி வந்தது. அந்த நாள் ஐப்பசித் திங்கள் 30ம் நாள், கங்கையைத் தேடி காசி விசுவநாதர், விசாலாச்சி, துண்டி விநாயகர், காலபைரவர் ஆகியோரும் திருமயிலாடுதுறைக்கே வந்துவிட்டனர். அன்று வந்தவர்கள், இன்றுவரை மயிலாடுதுறையிலேயே தங்கி பத்தர்களுக்கு அருள்புரிந்து வருகின்றனர். திருவையாறில் இருந்து ஐயாறப்பரும் இங்கு வந்து அருள் புரிகிறார். கங்கையே நீராடி பாவம் தீர்த்தத்தால், காசிக்கு ஒப்பனை தீர்த்தத்தலமாக இத்தலம் விளங்குகின்றது.

### திருக்கோயில் அமைப்பு

திருக்கோயிலின் இராசகோபுரம் ஒன்பது நிலைகளை உடையதாக உயர்ந்து காணப்படுகின்றது. இதன் உட்புறம், இடது பக்கமாக கோயிற் திருக்குளம் அமைந்துள்ளது. அதில் நீராடிச் செல்ல, அடுத்துள்ள திருச்சுற்றுக் கோபுரம் மூன்று நிலைகளை உடையதாக விளங்குகின்றது. அடுத்து இடப்புறம் பிள்ளையார் கோயிலும் அதனைக் கடந்தவுடன், சுப்பிரமணியர் கோயிலும் காணப்படுகின்றன. அடுத்துள்ள திருமதிலைக் கடந்தவுடன் வலப்புறமாக அதிகார நந்தியுள்ளது. திருச்சுற்றில் வியாக்கிய பாதர், பதஞ்சலி வியாக்கிய பாதர், சேக்கிழார், ஞானசம்பந்தர், அப்பர், பிள்ளையார், எழுநங்கையர், 63 நாயன்மார்களின் செப்புத் திருமேனியால் நூற்றுவலிங்கம், இத்திரலிங்கம், அனல்லிங்கம் முதலான இலிங்கங்களும் காணப்படுகின்றன. மூலவராக மயிலைநாதர் (வள்ளலார்), தேவகோட்டத்தில் பிள்ளையார், நடராசர், தென்முகக் கடவுள், அண்ணாமலையார், நான்முகன், மலைமகள் முதலான திருமுன்களும் உள்ளன.


“ஆயிரம் ஆனாலும், மாயூரம் ஆகாது” என்ற பழமொழி, மயிலைப் போன்ற அழகான பறவை உலகில் இல்லை என்ற கருத்தை வெளிப்படுத்தும் நோக்கில் சொல்லப்பட்ட பழமொழி. எனவே நாமும் திருமயிலாடுதுறையில் வீற்றிருக்கின்ற, அருள்மிகு மயிலம்மை உடனுறை மயிலைநாதரை வணங்கி, முப்பிறப்பிலும் இப்பிறப்பில் செய்த பாவங்களை நீக்கி, நல்வாழ்வு பெற்றுச் சீராய் வாழ்வோமாக.

திருச்சிற்றம்பலம்

சிவத்திரு. கலாநிதி. தென்னாடு அரங்கன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 21 2229722 | arangan@thennadu.org




சிவத்திரு. சிவ செந்தமிழாதன்,
தலைவர் – சைவ மாணவர் சபை,
(பதிவு–HA/4/JA/343)
0715588737, aathan@thennadu.org



# பெண்ணின் பெருந்தக்க யாவுள?

ஓயாமல் சுழலும் இந்த உலகம், உயிர்மை காயாமலும் சுழல்கிறது. பச்சையும், உயிர்ப்பும், உயிர்ப்பின் ஒலியும், இடைவெளி இல்லாமல் உலகம் எங்கும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. எங்கள் பால்வீதியில், இந்தப் பூமியில் மட்டும் தான் இத்தகு சிறப்பு நிகழ்கின்றது என்றால் அதன் பெரும்பங்கு உரிமையும் பெண்ணையே சாரும்! அற்புதமான ஒரு உயிரியை இந்த உலகுக்கு தன் கருவில் வைத்து சுமந்து தரவல்ல அதி உன்னதமான ஆற்றலைப் பெற்றவளே பெண்! இதனாலே தான் பெண்ணின் பெருந்தக்க யாவுள? என்றார் வள்ளுவர்!

உயர் சைவநெறி தளைக்க வந்த, எம் நாயன்மார்களும் பெண்களின் பெருமையை உணர்ந்தவர்களே! **‘சத்தி சிவமாக’** இறைவனைப் பாடி மகிழ்ந்தனர்! தாயுமானவனான இறைவன், தன் இடப்பாகத்தில் சரிநிகர் பங்கை பெண்ணுக்குத் தந்து, உயர்ந்த தத்துவத்தை உலகுக்கு உணர்த்தினான்! அருளே வடிவான திருஞானசம்பந்தப்பிள்ளை தன் திருப்பாடல்களிலே, உமையம்மைக்கு முதலிடம் தந்து இறைவனை விழிக்கும் பாங்கை, அவர் தேவாரப்பாடல்களெங்கும் நாம் கண்டு மகிழலாம்!

**“தோடுடைய செவியன்”** என்று தொடங்கியதும், **“வண்டார்குழல் அரிவையொடு பிரியாவகை பாகம் கொண்டான்”** என்றும், **“உண்ணாமுலை யுமையாளொடுமுடனாகிய ஒருவன்”** என்றும் **“வேயுறு தோளி பங்கன்”** என்றும் பலவாறு தனது பாடல்களில் பெண்ணாகிய உமைக்கு முதலிடம் தந்து நிறைவார்! இத்தகு பாடல்களைத் தாண்டி, காரைக்கால் அம்மையாரையும், திலகவதியாரையும், மங்கையற்கரசியாரையும், சைவ உலகம் தன் தலைமைப் பீடத்தில் வைத்தே போற்றியது எனலாம். பெண்ணாய் பிறந்தால் முத்தி கிட்டாது என்று சமணமும், பெண் துறவிகளைச் சேர்த்தால் தம் நெறியின் வாழ்நாள் குறையும் என்று பௌத்தமும், முத்திக்கு முட்டுக்கட்டை போட, முத்தி கொடுப்பவளாகவே பெண்ணை உயர்வுபடுத்தும் சைவத்தின் நெறியை சார்ந்தோர் அறிவர். நிற்க

இன்று நாம் வாழும் சமூகத்தில் பெண்ணடிமைத்தனம் பற்றியும் ஆணாதிக்கம் பற்றியும் சில தேவையற்ற கருத்துப் பகிர்வுகளைக் காண்கின்றோம். இரு பெண்கள் திருமணம் செய்துகொள்ளும் அதிமேதாவித்தனங்களையும், அது அவர் அவர் சுய விருப்பு என்று ஆலவட்டம் பிடிக்கும் சில புதுமைப் புரச்சியாளர்களையும் நாம் காண்கின்றோம். நியதிகளை தகர்த்து புதுமை புனைய முற்பட்டு, அவதியும் அல்லலும் கொண்டு, எதை நாகரிக வளர்ச்சி என்று கருதுகிறார்களோ, அதனாலையே நாகரீகமற்ற காலத்தை நோக்கி பயணப்படப் போகின்றனர்.

**‘பண்பாடு’** என்பது பல்லாயிரம் ஆண்டுகளாகப் பண்பட்டு வந்த ஒழுக்கமும், அதுசார்ந்து வரும் விழுமியங்களுமேயாகும். இன்றைய, பெண்விடுதலைப் போராளிகள் என்று தம்மைத் தாமே அடையாளப்படுத்திக் கொள்பவர்களது கருத்துக்கள், அரைவேக்காட்டுத்தனமானவை என்பதை அறிதல் நன்று. இந்தப் புரட்டாசித் திங்கள் வளர்பிறையில், பெண்ணுக்கு, பெண்ணாகிய பெரும் சத்திக்கு **‘ஒன்பானிரவாக’** (நவராத்திரி) விழாக்கொண்டோம்! பெண் எனும் பெரும் சத்தி, ஆண் எனும் துணை கொண்டே அகிலத்தைப் படைக்க வேண்டும். அதுவே நியதி. அதுவே ஒழுக்கமுமாகும். அந்த அற ஒழுக்கத்தையே **‘கற்பு’** என்று தமிழ் சான்று பகர்கின்றது. அந்தக் கற்பு மனத்தாலும், உடலாலும், செய்கையாளும் ஒருவனையே சார்ந்து தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும், அப்படி நிலை நிறுத்திய மாதர்களே, வானுறையும் கடவுளர்களாயினர்.

ஆன்றோர் ஏற்றுக் கொண்ட அறத்தின் வழி பயணப்படுவதே ஆண் பெண் இருவருக்குமுரிய நல்லொழுக்கமாகும். அந்த அறத்தின் மூலமே பழந்தமிழர் பண்பாடு என்பதை சங்கப்பாடல்களில் கற்றோர் அறிவர். பின்வந்த பாரதியும், அதனை இன்னும் எளிமைப்படுத்தி,

**“காதலன் ஒருவனை கைப்பிடித்தே - அவன்**
**காரியம் யாவினும் கைகொடுத்து, மாதர் அறங்கள்**
**பழமையைக் காட்டிலும் மாட்சி பெறச்**
**செய்து வாழ்வோமடி”**

என்று தன் **‘விடுதலைக்கும்மியிலே’** பதிவு செய்கின்றார். பெண் விடுதலைக் கவிஞரின் இந்த வரிகளை இன்று புடம்போட்டு பார்க்குமளவில் நவீன போலிப் புரச்சியாளர்கள் இல்லை என்பது தான் உண்மை.

**“தெய்வந் தொழுஅள் கொழுநற்றொழுவாளைத்,**
**தெய்வந்தொழுதகைமை திண்ணியதால், தெய்வமாய்**
**மண்ணக மாதர் கணியாய கண்ணகி**
**விண்ணகமாதர்க்கு விருந்து”**

என்று அடிக்கோடிடுகிறது சிலப்பதிகாரம். **‘கற்பு’** என்பதே தேவையற்ற சொல் என்று, வாதிடும் கருஞ்சட்டைக்காரர்களுக்கும், கவலைக்குரிய சில பெண்ணியவாதிகளுக்கும், வள்ளுவன் மிகத்தெளிவாகச் சொல்லுகின்றான், பெண் தன் கற்பொழுக்கத்தைக் காத்து நிற்பாளாக இருந்தால் மட்டுமே, அந்தப் பெண்ணிலும் பெரியது என்று இந்த உலகினில் எதுவும் இல்லை என்று!

**“பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பெனும்**
**திண்மை உண்டாகப் பெறின்”**

திருச்சிற்றம்பலம்

**யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த இறைநெறி எழுத்தாளரும், வில்லிசைக் கலைஞரும், ஓதுவாருமான**

# யாழ். இந்துவின் பழைய மாணவன் சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் அவர்களின் வாழ்க்கைப் பயணம்

ஈழமணித் திருநாட்டின் முடிபோல விளங்குகின்ற யாழ்ப்பாணக் குடாநாட்டிலே வண்பண்ணை நாச்சிமார் கோயிலடியில் வாழ்ந்தவர் தான் வேலாயுதம் இராசையா அவர்கள். இவர் மதவடி ஒழுங்கையில் வசித்த, நாகமணி அப்பாத்துரை பொன்னம்மா தம்பதியினரின் மூத்த மகள் இரத்தினம்மா என்பவரை மணந்து, இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தார். நாச்சிமார் கோயிலடி உப தபாலதிபராகவும் கடமையாற்றி வந்த இவர்,

**“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது“**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறட்பாவுக்கமைய தம்முடைய குடும்ப வாழ்க்கையைச் சிறப்பாக நடத்தி வந்தார். இந்தத் தம்பதியினருக்கு இறையருள் நலத்தால் நன்மக்கட்பேறு வாய்க்கப் பெற்று, 1950ம் வருடம் தைத் திங்கள் 2 ஆம் நாள் (15.01.1950) கலையம்சம் பொருந்திய ஓர் ஆண்மகவு பிறந்தது. அழகு மிளிரும் ஒளி பொருந்திய முகத்துடன் விளங்கிய, இக்குழந்தையின் தோற்றத்தைக் கண்ட பெற்றோர் ஸ்ரீதரன் என்று பெயர் வைத்து, பரிவோடும் பாசத்தோடும் பக்குவமாக



வளர்த்து வந்தனர். ஸ்ரீ என்றால் அருள் என்று பொருள். நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த ஸ்ரீதரனை, ஸ்ரீ என்று அன்பாக, ஆசையோடு அழைத்து மகிழ்ந்த பெற்றோர், இவருடைய கல்வியறிவு சிறக்கக் கருதி, யாழ் பெரியபுலம் பாடசாலையில் சேர்த்தனர்.

அங்கு தமது ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொண்ட பிறவிச் சைவராகியா இவர், 1959 இல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சேர்ந்து தமது மேற்படிப்பைத் தொடர்ந்தார். பின்பு 1964 இல் க.பொ.த சாதாரண தர தேர்வில் சித்தியெய்திய இவர், 1965 ஆம் வருடம் உயர்தர வகுப்பிற் சேர்ந்தார். அக்கல்லூரியின் பிரார்த்தனை நிகழ்விலும், உயர்தர வகுப்பில் பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டி முதலானவற்றிலும் பங்குபற்றி பரிசில்கள் பெற்று, நற்பெயரைத் தட்டிக் கொண்டார். அப்போது கல்லூரியில் கற்பித்த ஆசிரியர்களான ஏரம்பமூர்த்தி, குமாரசாமி, மகாதேவா சிவராமலிங்கம்பிள்ளை, சொக்கலிங்கம், ஆசைப்பிள்ளை, சிவசுப்பிரமணியம், முத்துக்குமாரசாமி, சோமசுந்தரம், மயில் வாகனம், சுப்பையா பிள்ளை ஆகியோரிடம் கல்வி கற்கும் நல்ல வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டதால், இவர் கலைமகள் அருளால் கல்வியில் மேம்பாட்டுடன் திகழ்ந்தார்.

குறிப்பாக சிவராமலிங்கம்பிள்ளை, சொக்கலிங்கம் (சொக்கன்) ஆகியோர் இவருடைய கல்விச் சிறப்பைக் கண்ணுற்று, சைவப்புலவர் பண்டிதர் தேர்வுகளில் பங்கேற்றுப் பட்டம் பெறுமாறு ஊக்குவித்தனர். அதன்பயனாக 1972 இல், சைவப்புலவர் பரீட்சையிற் சித்தி பெற்று, சித்தாந்த பாலபண்டிதர் பரீட்சைக்குத் தோற்றி நூன சித்தியும் பெற்று சிறந்து விளங்கினார்.



சிவத்திரு.
ஆறுமுகம் சசிநாத்
கலைமாணி
தென்னாடு சிவமடம்

காலக்கிரமத்தில் தனது கல்லூரி வாழ்க்கையை முடித்துப் பின் பொது வாழ்க்கையில் பங்கேற்று சிவப்பணி ஆற்றத் தொடங்கினார். பின்னர் உபதபாலதிபராக இருந்த தந்தையாருடன் சேர்ந்து சிறிது காலம் கடமையாற்றினார். அதன் பிறகு நாச்சிமார் கோயிலடியில் இருந்த காலத்தில் 1974 ஆம் வருடம் ஸ்ரீதரனின் கல்விச் சிறப்பையும் புலமையையும் கண்டு, யாழ்ப்பாணம் ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை அதிபர் ஆ. சுப்பிரமணியம் என்பவர் தம்முடைய அச்சகத்தில் சரவை ஒப்பு நோக்குநராக அவரை நியமனம் செய்தார்.

அப்பொழுது அங்கே புத்தகம் அச்சிட்ட மூதறிஞர் க.சி.குலரத்தினம் ஆசிரியருடைய அறிமுகம் ஸ்ரீதரனுக்குக் கிடைக்கவே, அவருடைய நூலாக்கத் திறமையின் பால் இவருக்கும் ஆர்வம் ஏற்பட்டது. அச்சூழலில் கம்பராமாயணம், இந்துசமயம் ஆகியவற்றில் இவர் பரந்த விரிவான அறிவைப் பெற்றுக் கொண்டார். ஸ்ரீதரன் அவர்கள் ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகத்தில் ஒப்புநோக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, வேறு பல ஆக்கத்திறனான பயிற்சியிலும் சிறந்து விளங்கினார். சில விடயங்களை ஒப்புநோக்கும் போது பல்வேறு பிழைகளையும் சுட்டிக்காட்டி, நூலாசிரியரே வியக்கும் வகையில் சிறப்பான ஒரு விடயதாரியாக இவர் விளங்கியமை குறிப்பிடத்தக்கது. அதன் பயனாகத் தாமும் புத்தகம் எழுதி வெளியிடவேண்டும் என்னும் ஆசையினால் உந்தப்பட்டார்.

மூதறிஞர் க.சி.குலரத்தினம், சொக்கன் ஆசிரியர் முதலானோர் தங்களுடைய நூல்களை ஸ்ரீதரன் பிழைதிருத்தம் பார்த்த போது, எந்தவித பிழையும் இல்லாமலும் விடயப் பிழைகள் சிறந்த முறையில் திருத்தஞ் செய்யப்பட்டிருப்பதையும் கண்டு ஆச்சரியப் பட்டனர். தாங்கள் எழுதிய நூல் நல்ல முறையில் பிழையில்லாமல் அச்சுவாகனம் ஏறியமையால், தங்கள் முகவுரையிலும் சிறந்த முறையில் கடமையாற்றிய ஸ்ரீதரனுடைய நூலாக்கப் பணியை வியந்து பாராட்டிப் போற்றியுள்ளனர்.

1975 முதல் 85 வரையில் ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலையிலும், அச்சுக் கூடத்திலும் சிறப்பான பணி செய்த ஸ்ரீதரன் பின்னர் 1985 ஆம் வருடம் காலச்சூழலில் உதயன் நாளிதழ் ஆரம்பமாகவே அதில் சேர்ந்து பத்திரிகையாளராகவும் மிளிர்ந்தார். இப்படியிருக்கும் நாளில் 1983 இல் ஆனைப்பந்தியைச்



சேர்ந்த மயில்வாகனம் வாலாம்பிகை தம்பதியினரின் மகளான சத்தியபாமாவைத் திருமணஞ் செய்து கொண்டார். அவர் ஒரு வயலின் ஆசிரியை. இல்லறமான நல்லற வாழ்வில் இவருக்கு 1986 ஆம் வருடம் ஓர் ஆண்குழந்தை பிறந்தது.

இவர் தமது மகனுக்கு நிதர்சன் என்று பெயர் சூட்டினார். 1989 ஆம் வருடம் ஒரு பெண் குழந்தை பிறந்தது. மகளுக்கு குவலயா என்று பெயரிட்டனர். இவருடைய வாழ்க்கையிலே துன்ப நிகழ்வாக ஒரு சம்பவம் 2004 ஆம் வருடம் நிகழ்ந்தது. அதாவது விதி செய்த சதியாலே பெண் மகவான குவலயாவின் பருவச்சடங்கு நடைபெற்று, இரண்டாம் திங்கள் வேம்படி மகளிர் கல்லூரியில் கற்று கொண்டிருந்த போது நோய்வாய்ப்பட்டு இறக்க நேரிட்டது.

(05ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

தம்முடைய அன்பு மகள் காமாட்சி அம்பாளின் பாதம் சேர்ந்த காரணத்தால், இவரும் இவர் மனைவியும் மாறாத துன்பசாகரத்தில் மூழ்கித் தவித்தனர். ஏனெனில் குவலயா ஒரு சங்கீத ஞானம் நிறைந்த நல்ல சாரீரம் உள்ளவராவார். மகள் குவலயா பாட, மகன் நிதர்சன் மிருதங்கள் வாசிக்க, தாய் சத்தியபாமா வயலின் இசைக்க, தந்தையார் ஸ்ரீதரன் தாளம் போடக், குடும்பமே கச்சேரி செய்து மகிழ்ந்தது. யார் கண்பட்டதோ தெரியவில்லை மகளை காலன் பறித்துச் சென்றுவிட்டான்.

அன்பு மகளைப் பிரிந்த துயரத்தால், இவருடைய வாழ்க்கையில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. இதன் காரணமாக உதயன் பத்திரிகையில் வேலை செய்த போது பல சமயக் கட்டுரைகளையும், தமிழ்க் கவிதைகளையும் தம்மை மறந்த நிலையில் எழுதத் தொடங்கினார். மேலும் விழாக்கள் பற்றியும், பண்டிகைகள் பற்றியும், நோன்புகள் பற்றியும், நாட்டில் நிகழும் கோயில் விழாக்கள், குடமுழுக்குகள் பற்றியும் இவரது விரிவான ஆக்கங்கள் பத்திரிகைகளில் பிரசுரமாகின. அத்துடன் உதயன், தினக்குரல், வலம்புரி, தினமுரசு ஆகிய நாளிதழ்களில் இவரது ஆக்கங்கள் தொடர்ந்து வெளிவந்தன.

மேலும் கொழும்புப் பத்திரிகையான வீரகேசரி, தினபதி, தினகரன், சிந்தாமணி முதலானவற்றிலும் சைவநீதி, இந்து ஒளி முதலான சஞ்சிகைகளிலும், இவரது கட்டுரைகளும்



கவிதைகளும் அழகாகப் பிரசுரமாகி வாசகரிகளிடையே நல்லதொரு வரவேற்பைப் பெற்றுக் கொடுத்தது. மேலும் யாழ்ப்பாணத்தில் தொண்டமானாறு செல்வச் சந்நிதி, சந்நிதியான் ஆச்சிரமம் வெளியிடும் ஞானச்சுடர் சஞ்சிகையிலும், தெல்லிப்பழை துர்க்காதேவி திருக்கோயில் வெளியிடும் அருள் ஒளி சஞ்சிகையிலும் இவருடைய கட்டுரைகள் வெளிவரவத் தொடங்கின. இவரது எழுத்தாற்றல் சிறப்பைக் கண்ட சந்நிதியான் ஆச்சிரமம் இவருக்குப் விருதுகள் பல வழங்கிச் சிறப்பித்தது.

இதனிடையே இவர் தமது சைவசமய அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தி ஆலயங்களிலும், விழாக்களிலும் சமயம் சார்ந்த பேச்சுக்களையும், சொற்பொழிவுகளையும் நிகழ்த்தி, சமூகத்தில் நற்பெயரை ஏற்படுத்தத் தவறவில்லை. அதுமாத்திரமன்றி கோயில்களில் பூசையின் போது ஐம்புராணம் (பஞ்சபுராணம்) மற்றும் திருமுறைகள் ஓதுவதிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்று விளங்கினார். அதுமட்டுமன்றி சமயவிழாக்கள் ஆரம்பமாகும் போது, இறைவணக்கம் பாடித் தொடக்கி வைக்கும் பணியையும் செய்து வந்தார். அத்துடன் 1967 ஆம் வருடம் தமது முதல் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியையும் செய்ய ஆரம்பித்தார். அதாவது யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் தட்டாதெருவுக்கு அண்மையிலுள்ள அருள்மிகு அரசடி விநாயகர் கோயிலில் பெருஞ்சிவனிரவு அன்று, முதன் முதலாக ஒரு வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை நிகழ்த்தினார். அந்த நிகழ்ச்சியானது மிகவும் சிறப்பாக அமைந்து மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பையும் மதிப்பையும் பெற்றுக் கொடுத்தது.

அதன் பயனாக ஸ்ரீதரன் அவர்கள் கலையுலகில் பிரவேசித்து, 'ஸ்ரீதர் வில்லிசைக் குழு' என்று ஒரு குழுவை அமைத்து, யாழ் குடாநாட்டில் உள்ள பல்வேறு கோயில்களிலும், மண்டபங்களிலும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை நிகழ்த்தி வந்தார். இவருடைய வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு இவரது மகன் ஸ்ரீ நிதர்சன் மிருதங்கம் வாசித்து, நற்புகழைப் பெற்றுக் கொடுத்தார். அது மட்டுமன்றி மகன் நிதர்சன் வில்லிசை நிகழ்ச்சிகளில் அவ்வப்போது நகைச் சுவையாகப் பேசி மக்களைக் கவர்ந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஆரம்பித்த இவருடைய கலைப்பயணம் யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியாக மேடையேற்றியதுடன் கொழும்பு, கண்டி, நாவலப்பிட்டி, நயினாதீவு, நெடுந்தீவு, எழுவைதீவு முதலான இடங்களுக்கும் பரந்து விரிந்து, தொடர்ந்தமை சிறப்பம்ச மாகும். தற்போது நிகழ்ச்சி இல்லாத காரணத்தினால் இவருடைய பாரம்பரிய வில்லிசைக் கருவியும், சுருதிப்



பெட்டியும் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களுடைய வேண்டுகோளிற்கிணங்க, நாவற்குழி சிவபூமி அரும்பெரும் காட்சியகத்தில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது சிவநெறிக் கலாநிதி ஸ்ரீதரன் அவர்கள் யாழ்ப்பாணம் வண்ணை அருள்மிகு வேங்கடேச வரதராசப் பெருமாள் கோயிலில் முதன்மை ஓதவராகக் கடமை புரிந்து வருகின்றார். சீர்வளர்சீர் ஆறுமுகநாவலர் பிரசங்கம் செய்த யாழ். வண்ணை அருள்மிகு வாலாம்பிகை உடனுறை வைத்தீசுவரன் கோயிலிலும் சுமார் ஒன்பது வருடங்களுக்கு மேலாக நித்திய ஓதவராகவும் இருந்திருக்கிறார்.

இவர் 1965 இல் வண்ணை அருள்மிகு காமாட்சி அம்மன் கோயிலில் கூட்டுப் பிரார்த்தனைச் சபையில் அங்கம் வகித்ததோடு, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கோயில் மண்டப வழிபாடுகளில் பாடல்களைப் பாடி வந்துள்ளார். இவருடைய தந்தையார் அம்பிகையைத் துயிலெழுப்பும் வகையில் திருப்பள்ளியெழுச்சி பாடி வந்ததைப் பார்த்த ஸ்ரீதரனும், அதிகாலை 5 மணிக்கு நித்திரை விட்டெழுந்து சுத்தி செய்து தாமும் அவருடன் சேர்ந்து திருப்பள்ளியெழுச்சி பாடியிருக்கின்றார், என்பதை எண்ணும் போது இளமை யிலேயே அவருக்கிருந்த இறை ஆர்வம் வியக்கவைக்கிறது. அத்துடன் நல்லூர் தேர்த்திருவிழா நாளில், இவரது தந்தையாரும், நாச்சிமார் கோயிலில் ஓதுவாராக இருந்த சண்முகலிங்கம் அவர்களும் நடைக்குழு இறைப்பாடல் வழிபாடு (நடை பஜனை) செய்தமையும் குறிப்பிடத்தக்கது. தந்தை எவ்வழி மைந்தன் அவ்வழி என்ற வகையில் மேலும் ஸ்ரீதரன் அவர்களும் அவரைப் பின்பற்றி வந்ததில் ஆச்சரியம் இல்லை.

1980 களில் ஓதுவார் சண்முகலிங்கம் அவர்களும், ஸ்ரீதரனின் தந்தையார் இராசையா அவர்களும் நாச்சிமார் கோயிலில் கூட்டுப் வழிபாடுகளில் பாடும் போதும் மற்றும் மார்கழி திருவெம்பாவைக் காலத்தில் அதிகாலை வீதிக்குழு இறைப்பாடல் (வீதி பஜனை) வழிபாட்டில் ஈடுபடும் போதும் அந்த நிகழ்வுகளிலும் கலைஞர் ஸ்ரீதரனும் சேர்ந்து கொள்ளத் தவறவில்லை. இவர் பல தேவாரப் போட்டிகளிலும் பங்குபற்றி பரிசுகள் பல பெற்றமையும குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஓதுவார் ஸ்ரீதரன் அவர்கள் பல திருமுறை முற்றோதல்களையும் செய்திருக்கின்றார். ஆர்மோனிய வித்துவான் அருணாவின் ஒத்துழைப்போடு, சதா வேல்மாறன் மற்றும் கபிலன், இசையமைப்பாளர் கண்ணன், அளவெட்டி முருகையா, ஆர்மோனியச் சக்கரவர்த்தி யோன் சுபாஸ், கேசவராஜா, தவனேஸ் முதலானோரும் பக்கவாத்தியம் இசைக்க திருமுறை ஒலிப்பேழைகளும் (இறுவட்டு) வெளியீடு செய்துள்ளார். அது மாத்திரமன்றி திருமுறை தந்த பெருமகனார், வாக்குக்கு அருணகிரி, வள்ளி திருமணம் முதலான வில்லுப்பாட்டு இறுவட்டுகளும் வெளியிட்டுள்ளார்.

தாம் இல்லாத காலத்தில் வில்லுப்பாட்டு அழிந்து விடாமல் இருக்க, இரண்டு பல்கலைக்கழக மாணவியர்க்கு வில்லிசையையும் பழக்கி விட்டிருக்கின்றார். கோப்பாயில் இயங்கி வந்த, அருள்நெறி மனதத்துவ மண்டபத்தில் சனி ஞாயிற்றுக் கிழமைகளில் சமயபாட வகுப்புக்களும், தேவாரப் பண்ணிசை வகுப்புக்களும் நடத்தி, மாணவ சமுதாயம் நன்கு பயன்பெற தம்மாலியன்றவரை பாடுபட்டு உழைத்தமை, இவரது பரந்த மனப்பான்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

யாழ் வண்ணை நாச்சிமார் கோயில் சுக்கிரவாரத் திருவிழாவுக்கென, தனது சொந்தச் செலவில் ஓர் அழகிய தங்கத்தேர் செய்து கொடுத்த பெருமையும் இவரையே சாரும். யாழ் அத்தியடிப் பிள்ளையார் கோயிலில் ஒரு திருவாசியும், பெருமாள் கோயிலில் இரண்டு புத்தக வெளியீடும் செய்துள்ளமை, இவரது பத்தி பூர்வமான பாங்குக்கு அணிசேர்க்கின்றதன. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன சமயப்பிரசாரகராகவும் அகில இலங்கை சைவப்புலவர் சங்க உறுப்பினராகவும் பணியாற்றும், ஓதுவாரும், எழுத்தாளரும், இறைநெறிச் சொற்பொழிவாளரும், வில்லிசைக் கலைஞருமாகிய இராசையா ஸ்ரீதரன் அவர்கள் வாழுங் காலத்திலேயே அறப்பணிகள் செய்து வருவது அவருடைய திறமைக்கு மகுடம் சூட்டினாற் போல அமைந்துள்ளதெனில் மிகையாகாது.

நல்லூர் முருகன் பள்ளி அறைக்குச் செல்லும் போது தேரின் முன்னே திருப்புகழ் பாடுகின்ற, பத்தி பூர்வமான பாடும் பணியிலும் இவர் ஈடுபட்டு வந்திருக்கின்றார் என்பது இவருடைய இறைநெறி நாட்டத்துக்கு உரைகல்லாக உள்ளது. யாழ்ப்பாணம் கோட்டை முனீசுவரர் கோயிலிலும் தற்போது ஓதுவார் பணி செய்து வருகின்றார்.

இவருக்கு கிடைக்கப் பெற்ற பட்டங்களாக, சைவப்புலவர் - 1972 ஆம் வருடம் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், யாழ்ப்பாணம். கவிமணி - 2000 ஆம் வருடம் - இந்துசமயப் பேரவை - யாழ்ப்பாணம், சிவநெறித் தொண்டர் - 2001 ஆம் வருடம் - வடபிராந்திய இந்துப் பேரவை, யாழ்ப்பாணம். சைவநெறிப்புலவர் - 2002 ஆம் வருடம் - ஸ்ரீதேவி குருகுல பீடம், கொழும்பு. சிவநெறிக் கலாநிதி - 2002 ஆம் வருடம் - சர்வதேச இந்துமதக் குருபீடம் கொழும்பு, மரபுக்கலைச் சுடர் - 2004 ம் வருடம் - பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம். ஆன்மீகச் செம்மல் - 2004 ஆம் வருடம் - ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகம் - கொழும்பு, கலைஞானச் சுடர் - 2005 ஆம் வருடம் - கலாசாரப்பேரவை - நல்லூர், யாழ்ப்பாணம், வில்லிசைச் செல்வர் - 2008 ஆம் வருடம் - அத்தியடிப் பிள்ளையார் ஆலய பரிபாலனசபை - யாழ்ப்பாணம், வில்லிசை வேந்தன் - 2013 ஆம் வருடம் - நாகேஸ்வரன் மணிவழாக்குழு - யாழ்ப்பாணம், இசைக்கலைமாணி - 2013 ஆம் வருடம் - சப்பிரமுவ பல்கலைக்கழகம் - இலங்கை, கலாபூஷணம் - 2011 ஆம் வருடம் - இலங்கை அரசாங்கம் - கொழும்பு, கலைமாமணி - 2020 ஆம் வருடம் - இந்து சமயகலாசார அலுவல்கள் திணைக்களம் - கொழும்பு, போன்ற இருபதிற்கு மேற்பட்ட விருதுகளை தன்னகத்தே கொண்டவர்.

கலைப்பயணம் மட்டுமன்றி படைப்பாற்றல் செயற் பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்தியுள்ளார். அந்தவகையில் வாக்குண்டாம் (உரையுடன்), வில்லிசைக்கலை, பாலர் தோத்திரத் திரட்டு, குழந்தைகளுக்கான மழலைச் செல்வம், சைவசமய தரிசனம், பாலர் மணிவாசகம், சிறுவர் கதைக் கொத்து, மழலை தமிழ் அமுதம், தெய்வீகத் திருமுறைத் தேனமுதம், நல்லை ஆதீன முதல்வர் நற்சரிதம், பஞ்சகம்மாளர், கிருஷ்ணாமிர்தம், அத்தியடிப் பதியுறையும் நர்த்தன விநாயகர், ஸ்ரீ காமாட்சி கவசம், பன்னிரு ஆழ்வார் பக்தி நெறி போன்ற சிறியவர்கள், பெரியவர்களுக்கு ஏற்ற விதத்தில் நூல்களை ஆக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இலங்கை



யாழ். வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் அண்மையில் நடைபெற்ற சுவர்க்கவாயில் ஏகாதசிப் பெரு விழாவில் யாழ். நாச்சிமார் கோயிலடி ஸ்ரீதர் வில்லிசைக் குழுவினர் நிகழ்த்திய "சூடிக்கொடுத்த சுடர் கொடி" வில்லிசை நிகழ்வைப் படத்தில் காணலாம்.

வானொலியில் 1980 - 1989 ஆம் ஆண்டு வரை திங்களுக்கு நான்கு முறை சைவ சமய நற்சிந்தனை வழங்கல் நிகழ்ச்சியிலும் பணியாற்றி வந்தார்.

இராசையா ஸ்ரீதரன் அவர்கள் ஓதுவராகவும், வில்லிசைக் கலைஞராகவும், இறைநெறி எழுத்தாளராக விளங்கும் இவர்கள், எந்நேரமும் புன்சிரிப்புத் தவழும் முகத்துடன் காணப்படும் இவர், நெற்றியில் திருநீறு துலங்க, உருத்திராக்கமும் அணிந்து திருமுறையை ஓதுவதே தனது இடையறா பணியாக கொண்டு இன்றளவும் பணியாற்றி வருகின்றார்.

இப்படியான கலைகளை, பண்பாட்டுப் பாரம்பரியங்களை அடுத்த தலைலைமுறைக்கு எடுத்துச் செல்ல இளம் சமுதாயத்தினர் முன்வரவேண்டும். இல்லையேல் தமிழர் கலைகள் பண்பாடுகள் காலப்போக்கில் அழியும் வாய்ப்புகள் வெகுதூரமில்லை.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்**

இப்படி வாழும்போது வாழ்வாங்கு வாழ்பவர்கள் வாழும் தெய்வங்கள். இவர் பணி மேலும் தொடர எல்லாம் வல்ல யாழ்ப்பாணம் தென்னாடு ஐம்பூதநாதப் பெருமான் என்றென்றும் அருள்மழை பொழிவாராக.

திருச்சிற்றம்பலம்

# யாழ்ப்பாணம் அராலியைச் சேர்ந்த பேராசிரியர் ஆறுமுகம் சதாசிவம்

# தமிழ் உலகின் அழிக்கமுடியாத அடையாளம்

தமிழ் மொழியை அதன் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களை வளர்ப்பது மற்றும் அது பற்றிய ஆய்வுகள் மேற்கொள்வது என்பது வெறுமனே உள்நாட்டில் இருந்து மட்டும் செய்வதல்ல, இலங்கைக்கு வெளியேயும் குறிப்பாக மேற்குலக நாட்டில் கலாநிதிப் பட்டம் பெற்று பரந்த வெளியுலக தொடர்புகளினுடாக ஆய்வுகளை மேற்றுக்கொள்வது இன்றியமையாததொன்றாகும் என்பதற்கு பேராசிரியர் ஆறுமுகம் சதாசிவம் ஐயா அவர்களின் வாழ்வு சிறந்த உதாரணமாகிறது. குறிப்பாக ஐயாவின் சுமேரிய மொழி மற்றும் பண்பாடு சார்ந்த ஆய்வு, தமிழர் வரலாற்றில் பாரிய உண்மைகளை உடைத்தெறியும் ஆய்வுகளுக்கு ஆதரவாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இவர் மொழி இலக்கியம் மற்றும் பண்பாட்டுக்கு ஆற்றிய அரும்பணிகளை இளைய சமுதாயத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

பேராசிரியர் ஆறுமுகம் சதாசிவம் அவர்கள் யாழ் வலி காமம் மேற்குப் பிரதேசத்தில் உள்ள அராலியில் ஆறுமுகம் பார்வதி தம்பதியினருக்கு மகனாக 15.02.1926 அன்று அவதரித்தார். அராலி சரசுவதி வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியினையும் பின்னர் அராலி இந்து ஆங்கில பாடசாலையில் இடைநிலைக் கல்வியையும் கற்றுத் தேர்ந்தார். அதன் பின்னர் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பயின்று ஆங்கிலத் தராதரப் பத்திரப் பரீட்சையில் முதற் பிரிவில் சித்திபெற்று தொடர்ந்து கொழும்பு ஆனந்தக் கல்லூரியில் உயர்தரம் பயின்று சித்திபெற்று இலங்கைப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானார்.




அதேவேளை மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சையிலும் சித்திபெற்றார். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் (கொழும்பு) தமிழைச் சிறப்பாகக் கற்று முதல் பிரிவில் சித்தியடைந்து 1952 இல் இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனையில் உதவி விரிவுரையாளரானார். 1954 - 1956 காலத்தில் ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் திராவிட மொழியியல் அறிஞர் பேராசிரியர் தோமஸ் பறோ (Prof.T.Burrow) வின் கீழ் "தமிழ் வினைச் சொற்களின் அமைப்பு" எனும் தலைப்பின் கீழ் ஆய்வு செய்து கலாநிதிப் பட்டம் பெற்றார்.

தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் பிற்காலத்தில் பேராசிரியராகவும் பணியாற்றினார். இலங்கைப் பல்கலைக்கழகம் கொழும்பில் தமிழ்ப் பேராசிரியராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். உலகின் பல்வேறு ஆராய்ச்சி மாநாடுகளிலும் கலந்து சிறப்பித்தவர் இவர்.

இலங்கைப் பல்கலைக்கழக பட்டதாரியான மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திருஞானேஸ்வரி அவர்களை மணம் புரிந்து மதியழகன் (அமெரிக்கப் பல்கலைக்கழகப் பேராசிரியர்), வைத்திய கலாநிதி குந்தவி (1964 - 2008) , பூங்கோதை (கொழும்பு பல்கலைக்கழக மேனாள் விரிவுரையாளர்), வைத்திய கலாநிதி அன்பழகன் ஆகியோரை நன்மக்களாகப் பெற்று மகிழ்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் காலத்திலே எவருமே எதிர்பாராத வகையிலே தமது சொந்தமண்ணில் 01.07.1988 அன்று இறையடி சேர்ந்தார்.

இருபதாம் நூற்றாண்டின் ஈழத்துத் தமிழறிஞர்களிலே மரபும் நவீனத்துவமும் நன்றாகத் தெரிந்த ஒருவராக பேராசிரியர் சதாசிவம் திகழ்ந்திருக்கிறார். இதற்கு முக்கிய காரணம் பன்மொழிகளிலே இவருக்கிருந்த புலமை, குறிப்பாகத் தமிழ், ஆங்கிலம், சமசுக்கிருதம் எனும் மூன்றிலே மிக்க பாண்டித்தியமுடையவராக இருந்திருக்கிறார். இத்தகையதான மொழியாளுமை இவரின் ஒவ்வொரு ஆக்கச் செயற்பாட்டிலும் வெளிப்பட்டிருக்கிறது. தமிழ் இலக்கிய வரலாறு, ஈழத்துத் தமிழிலக்கிய வரலாறு, கட்டுரை வகை இலக்கியம், ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுதல், மொழியியல், பதிப்பு முயற்சி என்றவாறாக இவரது தமிழ்ப் பணிகள் அமைகின்றன.

### மரபு என்பது பண்பாட்டு அடையாளத்தின் ஆணிவேர்

இலக்கிய வரலாற்றிலும் சரி இலக்கணத்திலும் சரி "மரபு" என்பது மிகவும் பிரதானமான இடத்தைப் பெற்றிருக்கின்றது. அனாவசியமான மரபு மீறல்கள் ஒரு இனத்தின் அடையாளத்தை இல்லாமல் செய்துவிடும் என்பதனை பேராசிரியர் நன்கு உணர்ந்து கொண்டதால் அதிலே மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்திருக்கிறார். அறுபதுகளிலே "மரபுப் போராட்டம்" என ஒன்று இலங்கையிலே ஏற்பட்ட போது, 'மரபு பேணப்படவேண்டும்' என்ற கொள்கை உடையவர்களுக்குப் பேராசிரியரே தலைமை தாங்கினார். இதற்கு முன்னோடியாக இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை தமிழ்ச்சங்கத்தின் இளங்கதிர் 1958 - 1959 இல் 'மரபு' எனும் தலைப்பில் பேராசிரியர் ஒரு கட்டுரையினை எழுதியிருந்தார். இதனை விட மரபு தொடர்பாகப் பேராசிரியர் தமது மாணவர்களுக்கு 17.02.1969 இல் வழங்கிய குறிப்பில் எளிமையும், தெளிவும், விளக்கமும் உண்டு.

### ஈழத்து இலக்கிய வரலாற்று முயற்சிகள்

இலங்கைப் பல்கலைகழகத்தின் தமிழ்ப் பாடக் கலைத்திட்டத்தில் ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறும் இடம் பெறவேண்டும் என்று உழைத்தவர்களில் பேராசிரியர் சதாசிவம் குறிப்பிடத்தக்க ஒருவர். இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இவர் கொண்டுள்ள ஈடுபாட்டைக் காட்டுவதாக இவரது கருத்துரைக்கோவை (1959) எனும் நூலில் முதலாவது கட்டுரையாக இடம்பெறும் 'ஈழமும் தமிழும்' என்பது காணப்படுகிறது.

தற்போது ஆவணக் காப்பகம் என்று பேசும் விடயத்தினை அன்றே செய்து காட்டியவர் சதாசிவம் ஐயா. இதற்கு மணிமுடி உதாரணமாக விளங்குவது இவரின் "ஈழத்து தமிழ்க் கவிதைக் களஞ்சியம்" எனும் ஆவணம். ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றுக்கான இவரது அரியதும் பெரியதுமான பங்களிப்பு 'ஈழத்து தமிழ்க் கவிதைக் களஞ்சியம்' (1966) எனும் கவிதைத் தொகுப்பு எனலாம். சங்ககால ஈழத்து பூதத்தேவனார் தொடக்கம் கலாநிதி சு.நடேசபிள்ளை (1895 - 1965) காலம்வரையும் இலங்கையில் வாழ்ந்த சிறந்த தமிழ்ப் புலவர்களின் கவிதைக் களஞ்சியமாக இது திகழ்கின்றது. தமிழ் இலக்கிய வளத்தினை வரலாற்று முறைப்படி ஆராய்வதற்கும் ஈழத்து தமிழ்ப் பிரபந்தங்களின் இலக்கியச் சிறப்பினை மட்டிடுவதற்கும் இது ஒரு சிறந்த கருவி நூலாக அமைந்துள்ளது. இந்தத் தமிழ்க்கவிதைக் களஞ்சியத்தில் இலங்கைத் தமிழிலக்கிய வரலாற்றினை 'இலக்கிய வரலாற்று ஆசிரியர்களின் கோட்பாடுகளிற்கேற்ப பெரும்பாலும் அரசியற் காலப்பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு' ஆறு காலங்களாக வகுத்துத் தந்துள்ளார். அவையாவன 1. சங்ககாலம், 2. யாழ்ப்பாணத் தமிழ்வேந்தர் காலம் (1216- 1621), 3. போர்த்துக்கேயர் காலம் (1621 - 1658), 4. ஒல்லாந்தர் காலம் (1658 - 1796), 5. ஆங்கிலேயர் காலம் (1796 - 1947), 6. தேசிய எழுச்சிக் காலம் (1948) என்பனவாகும். பேராசிரியரின் இந்த நூல் இலங்கைச் சாகித்திய மண்டலத்தின் வெளியீடாகும்.

### மொழியியல் ஆய்வு மற்றும் பங்களிப்பு

பேராசிரியரின் காலத்தில் அவர் கூடுதலான நேரத்தை மொழியியலுக்கும், 'ஈழத்துப் பேச்சுத் தமிழகராதி' தயாரிப்பிற்குமே செலவு செய்திருக்கின்றார். இவரது மொழியியற் பணியானது நூல்வடிவிலும், கட்டுரை வடிவிலும் உள்ளன. இவரது கலாநிதிப்பட்ட ஆய்வான "The Structure of the Tamil Verb' (தமிழ் வினைச் சொல்லமைப்பு) பகுதி - 1, பகுதி - II ஒக்ஸ்போட் பல்கலைக்கழக இணையப்பக்கத்தில் இருக்கிறன.

இவரது மொழி ஆராய்ச்சியில் சுமேரிய மொழி ஆராய்ச்சி கனதியான இடத்தைப் பெற்றிருக்கிறது. இதனை இவரது வாழ்க்கைப் பணி என்று குறிப்பிடும் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை சுமேரிய மொழி ஆதித்தமிழ் என்று நிரூபித்து, தமிழர்களின் தொல்பண்பாட்டு வரலாற்றுச் சிறப்பை உலகம் அறியச் செய்ய வேண்டுமென்பதே பேராசிரியரின் உயிர்மூச்சு" என்று குறிப்பிடுகிறார். பேராசிரியரின் Proto Sumero Dravidian (The Common Origin of Sumerian and Dravidian Languages, books available at Alexander Library, Perth, AU-WA 6000 Australia or UC Berkeley Libraries, Berkeley, CA 94720 United States) எனும் இந்த ஆய்வு பேராசிரியர் காலஞ்சென்று 28 ஆண்டுகளின் பின்னர் (2017) அவரின் துணைவியாரான திருஞானேஸ்வரி சதாசிவம் அவர்களின் அரும் முயற்சியால் சிவா தியாகராஜா அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ளது.

தமிழிலும், 'குமரித்தமிழ் அல்லது சுமர்மொழி' (1969) போன்ற தலைப்பில் ஒரு கட்டுரையினை பேராசிரியர் எழுதியிருக்கிறார். 'சுமர்' என்பது "குமர்' என்பதன் திரிபு என்பது பேராசிரியரின் துணிபு ஆகும். வரலாற்று மொழியியலின் பாற்படும் பேராசிரியரின் 'தமிழ்மொழி வரலாறு' எனும் நூலும் விரைவில் வெளிவர விருக்கின்றது. தமிழில் பேராசிரியரால் எழுதப்பெற்ற 'திராவிடத்தாய்' (1960), 'தொல்காப்பியரின் இலக்கணக் கொள்கைகள்" (1963), 'நன்னூலிலக்கணமும் மொழியியற் கோட்பாடுகளும் (1970) முதலான கட்டுரைகள் மொழியியல் துறைக்கு அரிய பங்களிப்பென்று கூற வேண்டும்.

பேராசிரியரின் சுமேரிய ஆய்வுகளுடன் மறைந்த மலேசியர், கலாநிதி க.லோகநாதன் அவர்கள் ஆய்வுகளையும் முதன்மை யாகக் கொண்டு மலேசிய அறிவியல் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த கலாநிதி.ராமகிருஷ்ணன் சிவகுமார் என்பவர் தமிழ் வேர்ச்சொற்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு புத்தகவடிவில் வெளியிடவுள்ளார். சுமேரிய நாகரிகம் தமிழர் நாகரிகம் என்று உறுதிப்படுத்துவதன் மூலம் எங்கள் பண்பாடு மூத்தபண்பாடு என்பதையும் மற்றும் தமிழர் அறிவியலின் ஆழத்தினையும் அத்துடன் தமிழில் இருந்து களவாடி பிறமொழிச் சாயம் பூசி, தமிழரின் ஆதி மூலத்தினை அழிக்க நினைக்கும் ஆழம் அறியா தனித்தமிழ் கிளர்ச்சியாளர்களினதும் உண்மை முகத்தினை வெளிக்கொண்டுவரவும் இது உதவும் என்று நம்பிக்கை கொள்வோம்.

### பேராசிரியரின் பண்பாட்டுப் பணிகள்

பண்பாட்டு பணியெனும் போது 'இந்துப்பண்பாடு' அல்லது பேராசிரியர் விரும்பியிருந்த "சைவப் பண்பாடு' என்பதையே குறித்து நிற்கின்றது. பேராசிரியரின் முன்மாதிரியான வாழ்க்கை, கலைத்திட்ட மற்றும் கற்பித்தல் செயற்பாடுகள், எழுத்தாக்கங்கள் என்பன மூலம் இவரது சமயப் பண்பாட்டுப் பணிகளை நோக்கலாம். சிவபெருமானின் அருவுருவத் திருமேனி சதாசிவம், இந்தப் பெயருடைய பேராசிரியர் சுத்த சைவக்காரர் என்பதை ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் சென்று ஆய்வினை மேற் கொண்ட காலத்தில் மாமிச உணவை கண்ணெடுத்தும் பார்க்காமையும் புகைத்தலையும் நாடாதவர் என்பதிலிருந்தும் அறிந்து கொள்ளலாம்.

பேராசிரியர் சைவசமயத்தின் மீது மிகுந்த பற்றுடையவர். எங்கள் சாதாரண தரப் பாடவிதானத்தில் கற்ற சமயபாடம் "இந்து சமய பாடம்' என்பது பின்னர் அறிஞர் உடகம அவர்களின் ஆதரவுடன் பேராசிரியரின் முயற்சியால் இப்பாடம் "சைவ நெறிப் பாடம்' என்று ஆனது. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் சைவநெறிப் பாடநூலில் காட்டப்பட்டி ருக்கும் கல்வியமைச்சின் இந்து சமய ஆலோசனைக்குழு 1978 - 1991இல் பேராசிரியர் ஆ.சதாசிவம் அவர்களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பேராசிரியரது சைவசித்தாந்த அறிவிற்கும், பற்றுக்கும் எடுத்துக்காட்டாக 'சைவ சித்தாந்தம்' (இந்து தர்மம் 1958 - 1959, பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்க வெளியீடு) எனும் கட்டுரையினையும் சரசாலை ச.தியாகராசா அவர்களின் "சித்தாந்த சைவநெறித் திறவுகோல் (1971) எனும் நூலுக்கு வழங்கிய அணிந்துரையிலிருந்தும் அறியலாம்.

எமது மக்கள் மத்தியில் சிலர் பழமையினைக் கடுமையாக வற்புறுத்துபவர்களாகவும் பலர் புதுமை நாட்டமுடைய வர்களாகவும், வாழ்ந்து வரும் சூழ்நிலையில் பழமையினைப் பற்றிக் கொண்டு புதுமையில் பயனுள்ளவற்றை ஏற்றுக் கொண்டு வாழ்ந்து காட்டிய ஒருவராக பண்டிதர் பேராசிரியர் கலாநிதி சதாசிவம் அவர்கள் காணப்படுகிறார். "எழுத்தறியத் தீரும் இழி தகைமை..." என்பதன் நெறியில் அவர் வாழ்வும் பணியும் அமைந்தமை நன்கு தெரிகின்றது. செந்தமிழ் மரபை அவர் கண்ணேபோற் போற்றியமைக்குக் காரணம் எமது மொழியும், பண்பாடும் அழிந்து விடக்கூடாது எனும் அக்கறையே. தமிழ்க்கிளை அகராதி அல்லது ஈழத்துப் பேச்சுத் தமிழ் அகராதி ஐந்து பாகங்களும் வெளிவரும் போது பேச்சு மொழியினையும் அவர் அங்கீகரித்தார் என்ற உண்மை தெரிய வரும். நமது மொழி உலகளாவிய ரீதியில் பரந்து வாழும் எம் மக்களால் பயன்படுத்தப்படும் சூழ்நிலையில், அதன் தனித்துவத்தைப் பேண பேராசிரியர் மேற்கொண்ட முன்னெடுப்புக்கள் மிகவும் பயனுடையவையாகும்.

### பேராசிரியர் கல்வி கற்ற மற்றும் ஆய்வுகள் மேற்கொண்ட பல்கலைக்கழகங்கள்

1948 - 1952 - University of Ceylon (BA)

1954 - 1956 - University of Oxford (PhD)

1964 - 1965 - University of Pennsylvania USA (Tamil Language Research / Sumerian Relations)

1965 - University of California, Berkeley. (Research under Prof.Emmeeneau)

1973 - 1974 - University of Oxford

1985 - 1986 - Tamil University, Tanjavur, India. (தமிழ் சொற்களின் பிறப்பு நெறி)

# ஈழத்து சித்தர்கள்: சித்தர் பெரியானைக்குட்டி சுவாமிகள்

(பெரியானைக் குட்டி சுவாமிகள் சென்ற திங்கள்த் தொடர்ச்சி)

### ஈனமுத்துவுக்குச் சோதனை

பணவசதி குறைந்ததும் அல்லாமல் துன்பத்தின் மேல் துன்பம் வந்து கொண்டே இருந்தது. என்ன துன்பம் வந்தாலும் சுவாமியை விடவும் அவருக்கு விருப்பம் இல்லை. ஒருநாள் ஈனமுத்து வெளியே சென்றிருந்த சமயம், ஆனைக்குட்டி சுவாமிகள் சுவரில் சாய்ந்தவண்ணமாகக் காலை நீட்டியபடியே மூச்சை அடக்கி உயிர் பிரிந்தவரைப் போலக் காட்சி அளித்தார்கள். ஈனமுத்தர் வந்தார், ஆட்டினார், அசைத்தார், சுவாமிகளின் உடல் விறைத்து மரக்கட்டை போலாயிற்று. பேச்சு மூச்சில்லை. தன்னை இக்கட்டான நிலையில் விட்டுச் சாமி பரலோகம் சென்று விட்டார் என ஈனமுத்தர் வெம்பினார். கீழே நிலத்தில் மலசலமும் கழிந்து கிடந்தன.

சுவாமிகளின் சமாதி நிலையை உணர்ந்து கொள்ள முடியாத ஈனமுத்து பலவாறாக யோசித்தார். ஈமக்கிரியை செய்யவோ கையில் பணம் இல்லை. கடன் கேட்கவும் இடம் இல்லை. அப்படியானால் என்ன செய்ய முடியும்? ஒரு விபரீத எண்ணம் தோன்றியது ஈனமுத்துவுக்கு. சுவாமிகள் இருந்தது ஒரு குடிசையில் அந்தக் குடிசைக்கு நெருப்பு வைத்துவிட்டால் சுவாமியும் அத்துடன் எரிந்து போவார். ஒரு செலவும் இல்லாமலே உடம்பு தகனமாகிவிடும். பொலிசார் கேட்டால் குடிசையில் எப்படியோ நெருப்புப் பிடித்துச் சாமியாரும் சாம்பலாய்ப் போனார் என்று கூறிக் கொள்ளலாம்.


இந்த யோசனையோடு ஈனமுத்து பட்டணம் சென்றார். ஒருவரிடம் கொஞ்சம் பணம் கடனாக வாங்கினார். முதலில் சாராய தாகசாந்தி செய்துகொண்டார். பின்பு தான் செய்யப் போகும் வேலைக்குத் துணையாக ஒரு போத்தல் சாராயம், ஒரு கட்டு விறகு, ஒரு கலன் மண்ணெண்ணெய் ஆகியவற்றை வாங்கிக் கொண்டார். எவ்வளவு தண்ணி போட்டாலும் நிதானம் தவறாதவர் ஈனமுத்து என்று அவரது சகாக்கள் பேசுவதுண்டு. ஆனால் இன்றோ ஈனமுத்து நிலைதளம்பும் அளவிற்குக் குடித்துவிட்டு வந்தார். வீட்டுக்கு வந்ததும் கொண்டு வந்த பொருட்களை வைத்துவிட்டு, சுவாமிகளைப் பார்த்தபடியே கலங்கி நின்றார். சுவாமிகளுக்குக் கிட்டச் சென்று பார்த்தார். சுவாமிகள் இருந்தபடியே இருந்தார்கள். மனதிலே ஒரு போராட்டம். ஒருவேளை அரசாங்கம் நடவடிக்கையில் இறங்கிவிடக் கூடுமானால் தான் சிறைக்கூடத்துக்குள் தள்ளப்பட வேண்டியவனே. சுவாமிகள் பெரிய மகான் அல்லவா? அவர் அறியாமல் எதுவும் நடக்க முடியுமா? இப்படி எண்ணியபடியே அங்குமிங்கும் உலாவினார் ஈனமுத்து. அவருடைய மனமே ஒன்றிலும் செல்லவில்லை. இப்படி சில நிமிடங்கள் கழிந்தன.

திடீரெனச் சுவாமிகள் கண்விழித்தார்கள். **"என்ன, ஈனமுத்து கப்பல் கவிழ்ந்தவன் மாதிரி ஆழ்ந்த யோசனையில் இருக்கிறாய்?"** என்றார்கள். சுவாமிகளுடைய குரல் கேட்டதுதான் தாமதம் ஈனமுத்து ஓடிச்சென்று சுவாமிகளுடைய பாதங்களிலே தலையை வைத்து நெடுஞ்சாண்கிடையாக (சாஷ்டாங்கமாக) விழுந்து இருபாதங்களையும் பற்றிக்கொண்டு வெம்பி வெம்பி அழத் தொடங்கினார். சுவாமி இருகால்களையும் விடுவித்துக் கொண்டவராய், **"ஏ, ஈனமுத்து உனக்கு இப்போ என்ன வந்துவிட்டது, இப்படி ஏன் அழுகிறாய், நான் செத்துப்போனேன் என்று அழுகிறாயா?"** என்று கேட்டார்கள்.

**"சுவாமி, என்னை மன்னிச்சுட்டேன் என்று ஒரு வார்த்தை சொல்லுங்கோ. நான் என்ன பாதகம் செய்ய இருந்தேன். இதிலிருந்து ஆண்டவனே என்னைக் காப்பாற்றி விட்டான்"** என்று சொல்லி 'ஓ' என்று அழத் தொடங்கினார். சுவாமிகள் கதையை மாற்றினார்கள். **"ஈனமுத்து சாராயமா கொண்டு வந்திருக்கிறாய்! அதை எடுத்து உடை' இரண்டுபேரும் குடிப்போம்"** என்றார் புன்சிரிப்புடன். ஈனமுத்துவுக்கு ஆனந்தம் பொங்கியது. போத்தலை உடைத்தார். **"அச்சா சாராயம் சுவாமி குடியுங்கள்"** என்றார். ஈனமுத்தரும் குடித்தார். ஆனால் சாராயம் பச்சைத் தண்ணீராய் மாறிற்று. உடனே ஈனமுத்தர் ஆனந்தக் கண்ணீர் விட்டு அழுதார். இன்று தான் கங்கை நீர் தமக்குக் கிடைத்ததாக எண்ணி எண்ணிக் கூத்தாடினார்.

சுவாமியைத் தூக்கி எடுத்தார். மாடுகள் தண்ணீர் குடிக்கும் மடுவண்டை சேர்த்தார். கழுவித் துடைத்தார். விறாந்தையிற் படிந்து கிடந்த மலத்தையும் துப்பரவு செய்தார். அது சந்தன மணம் வீசியது. ஆசனம் ஒன்றுகொண்டு வந்து அதன் மேல் சுவாமியை இருத்தினார். நீறு நெற்றியில் இட்டார். சந்தனப் பொட்டும் வைத்து குங்குமமும் இட்டார். சுவாமிகளை விழுந்து வணங்கியபின் கைகட்டி வாய் பொத்தி ஒருபக்கமாக நின்றார்.

சுவாமிகள் ஈனமுத்துவை அண்ணாந்து பார்த்தார். **"இனி வருவார்கள் பெரியாட்கள். காசுவரும், பணம் வரும், பயப்படாதே"** என்று சொன்னார். சுவாமிகளுடைய வாக்குப் பொன் வாக்காயிற்று. அடுத்த நாளே பெரிய பெரிய உத்தியோகத்தர்களும், சிறாப்பர்களும், செட்டிமாரும், முதலாளிமாரும் சுவாமிகளைத் தரிசிக்க போட்டியிட்டுக் கொண்டு வந்தனர். பணம் குவியத் தொடங்கியது.




ஈனமுத்துவும் புதுப்பலமடைந்து, புகழ்ச்சியோடு விளங்கலானார்.

சுவாமியும் வீதி சுற்ற அவாவினார். ஓர் வண்டியும் ஒரு சோடி மாடுகளும் வாங்கப் பெற்றன. அதிகாலையில் சுவாமிகள் ஒரு மாட்டு வண்டியில் எழுந்தருளிச் செட்டியார்கள் இருக்கும் வீதிகளில் பவனி வருவார்கள். நோயாளிகள், வறியவர்கள் வழிநெடுகிலும் வரிசையாக நிற்பர். சுவாமி தாம்பூலம் அருந்தினால் எச்சில் உமிழ்வது வழக்கம் இல்லை. உமிழ்நீர் செந்நிறமாகி வீழ்நீராய் நெஞ்சின் வழியே வழிந்து வரும். அந்த உமிழ்நீரைக் கையால் தடவி எடுத்து நோய்க்கு மருந்தாகப் பாவிப்பர். செட்டிமார் தெருநீளம் காசுப் பெட்டிகளைக் கையில் ஏந்திய வண்ணம், அவாவோடு காத்து நிற்பர். சுவாமியவர்கள் வண்டியில் அமர்ந்த வண்ணம் தாம் விரும்பிய ஒரு செட்டியாரின் காசுப்பெட்டியில் இருந்து பணத்தை அள்ளி எடுப்பார்.

பின்பு ஒரு மூடை சம்பா அரிசியும், சந்தனம், குங்குமம், மருக்கொழுந்து முதலியனவும், நெத்தலிக் கருவாடும், மாடுகளுக்கு பிண்ணாக்கு, தவிடும், விறகும் மற்றுந் தேவையான சகல பொருட்களும், மதுபானப் போத்தல் ஒன்றும் வாங்கிக் கொண்டு குடிசைக்குத் திரும்புவர். சுவாமிகள் எந்தச் செட்டியாரின் பணப் பெட்டியிலிருந்து பணம் எடுத்தாரோ, அந்தச் செட்டியாருக்கு அன்று குரு சந்திர யோகம். அன்று முழுவதும் கணக்கில்லாமல் பணம் பல வழிகளாலும் வந்து கொண்டேயிருக்கும்.

சுவாமிகள் கொண்டு சென்ற அரிசி மூடையை ஆக்கிக் கூட்டங் கூட்டமாக வரும் பிச்சைக்காரர்களுக்கு அன்று முழுவதும் சோறு கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். அன்று கொண்டு போன பொருட்களில் ஒன்றும் மிஞ்சாது. அடுத்த நாளும் நடைபெறும். பிச்சைக்காரர்களோடு தான் சுவாமிகளும் சேர்ந்து உண்ணுவார்கள். அவர்களைப்போலவே இவருக்கும் உணவு பரிமாறப்படும். ஒரு கவளம் அல்லது இரு கவளம் மாத்திரமேதான் உண்ணுவார்கள். மற்றவற்றை ஒரு குளையல் போட்டு சூழ நிற்பவர்களுக்கு ஒரு பிடிவீதம் கொடுத்து விடுவார்கள். சுவாமி சீராகச் சாப்பிடுவதில்லை என்று ஈனமுத்துவுக்கு ஒரு ஏக்கம். சுவாமிகளைச் சாப்பிடுமாறு வற்புறுத்துவார். **"இங்குள்ளவர்கள் அத்தனை பேரும் சாப்பிடும்போதே நானும் சாப்பிட்டு விடுகின்றேனே. தனியாகவும் சாப்பிட வேண்டுமா?"** என்று சுவாமிகள் சிரிப்பார்கள். சுவாமிகளுடைய பொருள் பொதிந்த கருத்துக்கள் ஈனமுத்துவுக்கு எவ்வாறு விளங்கப் போகிறது? சுவாமிகள் இப்படிப் பூடகமாகப் பேசும்போதெல்லாம் ஈனமுத்து **"ஆமாங்க, என்னங்க"** என்று சொல்லி சும்மா இருந்து விடுவார்.

### மூவர் சந்திப்பு

இந்தப் பிச்சைக்கார கும்பல்களோடு கும்பலாகச் சித்தானைக்குட்டியும் சுற்றித் திரிவார். சித்தானைக்குட்டி, ஆனைக்குட்டி மகானின் ஞானப் புதல்வன் என்பதை யாரும் அறியார். ஒருநாள் திடீரெனப் பெரிய ஆனையிடமிருந்து ஒரு உத்தரவு பிறந்தது. பேராதனைக்குப் போகவேண்டும் இரண்டு டிக்கெற் வாங்குங்கள் என்பதுதான் அந்த உத்தரவு. இதைப்பற்றிச் சீடனுக்கு மாத்திரமே விளங்கும். சீடன் இரண்டு ரிக்கெற்றுடன் வந்து சேர்ந்தார். இருவரும் கோச்சேரிப் பிரயாணமாயினர். சென்ற இருவர் பெரியானையும் சித்தானையுமாகும். புகையிரம் பேராதனையை அடைந்தது. புகையிரத மேடையிலே நீண்ட சட்டை அணிந்த ஒருவர் கையில் பிரம்பொன்றை சுழற்றியபடியே உலாவிக் கொண்டிருந்தார். அவர்தான் நவநாதசித்த சுவாமிகள். பிரிந்தவர் கூடினர். அவர்கள் மூவரும் புகையிரத மேடையிலேயே சந்தித்தபோது நவநாதசித்தர் தமது கைப்பிரம்பினால் முதலில் தன் தலையிலும் அதன்பின் பெரிய ஆனையின் தலையிலும் கடைசியில் சித்தானையின் தலையிலும் தொட்டுக் கொண்டார்கள். அதில் ஒரு அர்த்தம் இருந்தது. முதலில் தான் சமாதி அடைவதாகவும் அடுத்துப் பெரிய ஆனையும் கடைசியில் சித்தானையும் சமாதி அடைவர் என்பதுதான் தாற்பரியம்.

இவ்வளவுதான் அவர்கள் சந்திப்பு. இந்தி மொழியில் மூவரும் வாழ்த்துக் கூறிக் கொண்டனர். வந்த இருவரையும் புகையிரத மேடையிலேயே விட்டு விட்டு, நவநாதசித்தர் நாவலப்பிட்டி நோக்கி பயணமானார். புகையிரத மேடையில் நின்ற இருவரும் அடுத்த புகையிரதத்தில் கொழும்புக்குப் பிரயாணமாயினர்.

### ஆனைக்குட்டி சுவாமிகள் சமாதி

பெரிய ஆனை சமாதி அடையப்போகும் காலத்தை சித்தானைக்குட்டி சுவாமிகள் உள்ளுணர்வால் அறிந்திருந்தார்கள். அதனால் உரிய காலத்திற்கு முன்பே பெரிய ஆனையை விட்டு விலகாது சுற்றிக் கொண்டே இருந்தார். பெரிய ஆனையை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு சென்று, சமாதி வைக்க வேண்டும் என்பது சித்தானையின் எண்ணம். பெரிய ஆனை இதற்குச் சம்மதிக்கவில்லை. கொழும்பிலேயே சமாதியாக வேண்டும் என்பது அவரது திருவுள்ளமாகும். ஒருநாள் சித்தானையை அழைத்து வடக்கே ஒரு பெரியவருடைய சமாதி உள்ளது. (கடையிற் சுவாமிகளைக் குறிப்பிட்டே இங்ஙனம் கூறினார்கள்). அவருடைய மண்ணில் அடிமை மிதிக்கத் தகுதி அற்றவன். இவனுடைய சமாதி இங்குதான் அமைய வேண்டும் என்றார். சித்தானை இதைப்பற்றி எவ்வித முயற்சியும் செய்யாது இருந்துவிட்டார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவதிகை சென்றபோது, திருநாவுக்கரசர் உழவாரப்படை கொண்டு திருப்பணி செய்து வீரட்டானரை வழிபட்ட இடம் என்று அதனை மிதிக்க அஞ்சினார். வெளியிலிருந்தே வணங்கினார். இச்செய்தியை சுவாமிகளுடைய மேற்படி செயல் நினைவூட்டுகின்றது.

பெரிய ஆனைக் குட்டி சுவாமிகள் ஒருநாள் சித்தானைக்குட்டியுடன் மிக அன்பாகப் பேசிக் கொண்டிருந்தார். அடுப்பில் பெரிய விறகு அடுக்கிக் கிடாரத்தில் சோறு வெந்து கொண்டிருந்தது. பெரிய கொள்ளிக்கட்டை ஒன்று எடுத்து வருமாறு, சித்தானைக்குட்டிக்கு உத்தரவு பிறந்தது. சித்தானை எடுத்து வந்து குருநாதரின் கையில் கொடுத்தார். அதைப் பெரியானையார் புன்சிரிப்போடு வாங்கி தக தக என்று விளங்கும் கொள்ளியைச் சித்தானையின் புயத்தில் வைத்து அழுத்தினார். சித்தானையும் அதனைப் புன்சிரிப்போடு ஏற்றுக் கொண்டார். இதுவே பெரிய ஆனை சித்தானைக்குக் கொடுத்த தீக்கையாகும்.

சேர் பொன். அருணாசலம் அவர்களுடைய இல்லத்திற்கு அடிக்கடி பெரிய ஆனைக்குட்டி சுவாமிகள் வருவார்கள். அங்கு சாப்பிடுவார், ஒருநாள் அருணாசலம் அவர்கள் சுவாமிகளிடம், உமது மகிமையை எனக்குக் காட்ட வேண்டும் என்று கேட்டார்கள். சுவாமிகள் தமது உறுப்புகளையெல்லாம் தனித்தனியாக இருக்குமாறு காட்சி கொடுத்தார்கள். அன்று தொடக்கம் சேர் பொன். அருணாசலம் அவர்கள் சுவாமி மீது தனிமதிப்பு வைத்திருந்தார்கள். ஒருநாள் சுவாமிகள் அவரது இல்லத்திற்குச் சென்றபோது இன்று இந்த இல்லத்தில் மங்கலகரமான காரியம் நடைபெறப் போகிறது என்று சொன்னார்கள். அன்றுதான் திருமதி. சிவானந்தம் தம்பையா அவர்கள் பூப்படைந்த தினமாகும். இதனை தமது தெய்வீக சக்தியால் உணர்ந்து கூறியபின் சுவாமிகள் மீது அக்குடும்பத்தினரே நன்மதிப்பு வைத்திருந்தார்கள்.

சமாதி நாளும் நெருங்கிக் கொண்டிருந்தது. குருபரன் பெரியானைக்குட்டியார் ஒருநாள் திடீரெனச் சித்தானையை அழைத்தார். **"இங்கே சுற்றிக் கொண்டிருக்காமல் முன்னேசுவரம் போ"** என்றார். குருவின் வாக்கைத் தலைமேற்கொண்டவராய் முன்னேசுவரம் புறப்பட்டுச் சென்றார். சித்தானை முன்னேசுவரத்திலிருக்கும் போதே குருபரன் பெரியானைக்குட்டியார் கொழும்பில் சமாதி அடைந்து விட்டார். சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம், பிரபலர்களான செட்டிமார்கள் யாவரும் ஒன்று சேர்ந்து கொழும்பு முகத்துவாரம் கடற்கரையில் சமாதி வைத்து வணங்கி இன்புற்றனர். சமாதியை உள்ளடக்கி ஒரு பிள்ளையார் கோயிலும் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் பக்கத்திலுள்ள கடற்கரையில் ஆடி அமாவாசைத் தீர்த்தம் வெகு விமரிசையாக வருடா வருடம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

திருச்சிற்றம்பலம்

ஆக்கம் : ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
தொகுப்பு - சிவத்திரு.வடிவேலு கங்காளன்

# காலத்தால் மூத்த செந்நெறி!

# மரண வீட்டில் திருமுறைகள் ஓதல்

# சிவநெறியும் திருமுறைமரபுகளும்!

மரண வீட்டில் திருமுறைகளை ஓதக்கூடாது எனப் பிரம்ம ஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் கூறிய கூற்றுச் சைவ சித்தாந்தத்தின் அடித்தளத்தை உடைக்க முயல்கிறது. அவர் கூற்று முற்றிலும் பொருத்தமற்றது என்பதைத் திருவாளர்கள் வ. கந்தசுவாமி, த. சண்முகசுந்தரம், நா. செல்லப்பா, க. கணபதிப்பிள்ளை , செ.கனகசபாபதி, க.தியாகராசா முதலிய சைவப் பெரியார்கள் வீரகேசரி வார இதழ் மூலம் சைவத் தமிழுலகிற்கு விளக்கியுள்ளனர். **நாவலர் பெருமானும் சைவப் பெரியார் சிவபாத சுந்தரனாரும் பிறந்து அறிவொளி பரப்பிய எங்கள் ஈழவள நாட்டிலே இன்று ஆயிரமாயிரம் சைவப் பெரியார்கள் சைவப் பயிரை வளர்த்து வருவது மகிழ்ச்சிக்குரியது.**

முப்பது ஆண்டுகளாகச் சைவ சமயத்தையும், சித்தாந்த தத்துவத்தையும் பல்கலைக் கழக மாணவர்களுக்குப் போதித்துவரும் ஆசிரியர் என்ற முறையில்யான் சில விளக்கங்கள் கூறுவது பொருத்தம் என உணர்கிறேன். ஆன்மாக்களுக்குத் தனி நிலையுண்டு என்பதை வற்புறுத்துஞ் சைவ சித்தாந்தம் பிறவியெடுப்பதற்கு முன் அவற்றின் நிலை சிவத்தின் நிலையை ஒத்தது எனவும், வீடுபேறு என்பது ஆன்மா மீண்டும் தன் சுயநிலையை அடைதலே எனவும் சைவ சித்தாந்தங் கூறுகின்றது. பிறவியெடுத்த ஆன்மா முதலில் ஆணவ மலத்துடனுங் ஈற்றில் சிவத்துடனும் பந்தப்பட்டு நிற்றலின் **"கண்டது காட்டும் பளிங்கு போன்றது"** என வருணிக்கப்படுகிறது பந்தப்பட்ட ஆன்மா இரண்டு வித சரீரங்களைப் பெறுகிறது. ஒன்று சூக்கும சரீரம். மற்றையது தூல சரீரம். முன்னையது கண்ணுக்குப் புலனாகாதது. பின்னையது கண்ணுக்குப் புலனானது.

பிறப்பு, இறப்பு என்பன போக்கு வரவு புரியும் ஆன்மாவின் செயல்கள். எனவே மரணம் என்பது பிறவியெடுத்த ஆன்மாவின் சூக்கும சரீரம் கெடாது நிற்பத் தூல சரீரம் கெட்டுத் தோன்றும் நிகழ்ச்சியாகும். இதனைச் சிவஞானபாடியும் தெளிவாக விளக்குகிறது. எனவே ஒரு சைவ சித்தாந்தியின் மரண வீட்டிலும், அவன் உடலைச் சாம்பலாக்கிய பின்பும் செய்யப்படும் கிரியைகள் போக்கு வரவு புரியும் சூக்கும சரீரயாகிய அவனைச் சென்றடையும் என்பது சைவ சித்தாந்தியின் கோட்பாடு. இக்கோட்பாட்டின் படியே கிணற்றுள் விழுதல், தூங்கிச் சாதல், நஞ்சு குடித்தல், முதலிய செயல்கள் மூலம் வலிந்து இறப்பைத் தழுவிக் கொண்ட மனிதர்களின் ஆன்மாக்களை, அவற்றின் சூக்கும் சரீர நிலையில் சாந்தப்படுத்தும் நோக்குடனேயே வேறுபட்ட கிரியைகள் செய்யப்படு கின்றன அக்கிரியைகளுள் முக்கியமானது இறந்தவரின் இடத்தில் உணவுகளைப் படைத்தல். சூக்கும் சரீரியாகிய ஆன்மா எப்போ மறுபடியும் தூல சரீரத்தை பெறுகிறது என்பதை யாரும் அறியார்.

எனவே மரணம் என்பது போக்கு வரவு புரியும் ஆன்மாவின் ஒரு புனிதமான செயல். மரண வீட்டில் அசுத்தத்தையோ, ஆசௌசத்தையோ காண்பதும், கற்பிப்பதும் சைவ சித்தாந்திகளின் கோட்பாடுகளுக்கு முரணானது. இக்காரணங்களால் திருமுறை ஒதுதல் மூலமே இறைவனை வேண்டி ஆன்ம ஈடேற்றம் பெறுகின்றனர். சைவ சித்தாந்திகள் இலங்கையில் வாழும் இருபது இலட்சத்துக்கும் அதிகமான எண்ணிக்கை கொண்ட சைவ சித்தாந்திகளாகிய நாம் லிங்காயதர்களும் அல்ல் வீர சைவர்களும் அல்ல.

திருமுறைகள் வேதசாரம் என்றும், வேதங்கள் போல் புனிதமானவையென்றும் குருக்கள் அவர்கள் இரண்டையும் ஒப்பிட வேண்டிய தேவை இன்று வேண்டியதில்லை. மந்திரங்கள் என்ற வகையில் வேதங்களை ஓதும் தகுதி உயர்ந்த வகுப்பினர் எனத் தம்மைக் கற்பித்துக் கொண்ட பிராமணருக்கே உரியது. வேதங்களைக் கேட்டல் உயர்ந்த மேல் வகுப்பினராகிய மூவருக்கும் உரியதாம். வேதங்களை ஓதும் உரிமையும் கேட்கும் உரிமையும் நான்காவது வருணத்தராகிய சூத்திரருக்கு விலக்கப்பட்டுள்ளது. எம்போன்றோரின் ஆன்ம ஈடேற்றத்துக்குச் சைவத் திருமுறைகள் உள்ளன. இச்சைவத் திருமுறைகளைளே எமது தத்துவ சமய முதல் நூல்கள்!

இந்திய சமுதாய வளர்ச்சியின் சாபக் கேடாகவும் மனிதரிடையே ஏற்றத் தாழ்வுகள் அமைவதற்குக் காரணமாகவும் அமைந்த சில விதிகள் வேதாகமங்களில் உள்ளன. அவை எழுந்த காலத்துக்குப் பொருத்தமெனக் கொண்டாலுங் கூட வளர்ந்துவரும் சமுதாயாத்துக்கு முற்றிலும் பொருத்தமற்றவை. எமக்குப் புறம்பானவை. **விருப்பமான மறையவர்கள் வேதங்களை ஓதட்டும். சைவ உலகம் எவர் மீதும் எக்காலத்திலும் அதிகாரத்தைச் செலுத்த முற்படாது.**



பேராசிரியர்
கலாநிதி சதாசிவம்

வேதங்கள் தோன்றுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்துப்பண்பாட்டை யுடையது எமது சிவநெறி, கி.மு. 4000 ஆண்டு வரை ஏற்பட்ட பிரளயத்தின் பின் குமரிக் கண்டத்திலிருந்து பாரசீகக் குடா நாடுகளிற் குடியேறி உலகத்தின் முதலாவது பேரரசினை அமைத்துப் புகழ்பெற்ற சுமேரி (குமரியர்) எனப்படும் தமிழர்கள் கி.மு. 2700வரை பொறித்து விட்டுச் சென்ற கல்வெட்டுக்களில் **"சிவ"** என்ற சொல்லும் அதன் பொருள் **"எல்லா உயிர்களினதும் இறைவன்"** என்றுங் காணப் படுகிறது. அதே காலத்தில் சிந்து வெளியிற் பொறிக்கப்பட்ட முத்திரைகளில் **"நான்கு மிருகங்களின் நடுவே வீற்றிருக்கும் வடிவம்"** பசுபதி நிலையிலுள்ள சிவன் என்றும், அங்கு அகப்பட்ட சிவலிங்க முத்திரைகளின் அடிப்படையில் விளக்கங் கூறுவர் சேர். யோன் மார்சல். சிவன் ஒரு காத்தற் கடவுளாகவே கருதப்பட்டு வந்தான்.

**வேதகாலத்தின் பின் ஆரியர் தம் அழித்தற் கடவுளாகிய உருத்திரனைச் சிவனுடன் இணைத்து அவனின் திருநாமங்களில் ஒன்று எனக் கூறிச் சிவநெறியைத் தழுவலாயினர்.** யாகங்களைச் செய்வதன் மூலம் தமக்குக் கீழ்ப்பட்ட வருணத்தினரிடமிருந்து பொருள் பெற்றுக் கடவுளைக் காட்டிக் கொடுக்க முற்பட்ட பிராமணர்களின் செய்கையைப் புத்தர் பெருமானே கடிந்து கூறிப் பிறிதொரு மதத்தையே தோற்றுவித்தார். பகுத்தறிவும் அறிவு வளர்ச்சியும் ஏறஏறச் சமுதாயப் புரட்சிகள் தொடரலாயின. வழக்காறற்றுப் போன வேதியர்களின் வைதீக மரபுகளைச் சைவ மரபுகளுடன் இணைப்பதன் மூலம் பிராமணர்கள் யாகசாலைகளுக்குப் பதிலாக முற்றிலும் மாறுபட்ட பண்பாடுடைய பயன்தரும் சைவக் கோயில்களுட் புகுந்து கடவுளைக் காட்ட முற்பட்டனர்.

**பல்லவர்கள் காலத்தில் எழுந்த பக்திப் பாடல்களில் நாயன்மார்கள் சைவ மரபின் அடிப்படைகளை மீண்டும் வற்புறுத்துவதன் மூலம் சாதி வருணப் பாகுபாடற்ற மனித குலத்தின் ஒருமைப்பாட்டை விளக்கியுள்ளனர்.** இவர்களிற் பெரும்பாலோர் பிறப்பினால் அந்தணர்களாயினும் சுப்பிரமணிய பாரதியார் போன்று **சாதிகளில்லையடி பாப்பா** என்ற கருத்தை வற்புறுத்திச் சைவ உலகின் ஆன்மீக மரபுகளுக்கு விளக்கங் கூறி விட்டுச் சென்றனர். சாதி வகுப்புக்களற்ற சமுதாயத்தை உருவாக்கும் பண்பினை அடிப்படையாகக் கொண்ட சைவத் திருமுறைகள் ஆன்மாக்களின் தனிநிலையை வற்புறுத்துவதன் மூலம் வேதாகம மரபுகளின் அடித்தளத்தையே உடைத்து விட்டன. சைவ சமயப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் அதிகாரம் வேதாகமப் பண்பாட்டை வற்புறுத்தும் இந்து சமயப் பேராசிரியராகிய பிரம்மஸ்ரீ. கா. கைலாசநாதக் குருக்களுக்கே உண்டு என வாதிடும் பெரியார் வே. சின்னத்துரையவர்கள் உரிமைகளை வலிந்து பெற முயல்வது விந்தையாக இருக்கிறது.

இக்காரணங்களை முன்னிட்டே இலங்கையிலுள்ள சைவ சமயத்தவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகாட்டும் சைவ சித்தாந்தப் பேராசிரியர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்றும் அதற்காகிய பணத்தைப் பொதுமக்கள் நிறுவனங்களும் பெரிய கோயில்களின் ஆட்சிக் குழுக்களும் சேர்ந்து நடவடிக்கைகளில் இறங்க வேண்டுமென்றும் தீர்மானித்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவுக்கு மனுச் செய்துள்ளனரெனவும் அறிகிறோம். இது கைகூடும் போது பெரியார் சிவபாதசுந்தரனார் விட்டுச் சென்ற சைவ சித்தாந்த மரபுநெறி எம் ஈழவள நாட்டில் துலக்கம் பெறுமென நம்புகிறோம்.

பெரியார் இராமசாமி நாயக்கரும், அறிஞர் அண்ணாவும் கட்டியெழுப்பிய பகுத்தறிவு படைத்த தமிழ்ச்சமுதாயம் பண்டைய ஆரிய வேதங்களிலும் ஆகமங்களிலும் கூறப்பட்ட காலத்தோடொவ்வாச் சமுதாய வழக்க விதிகளை ஆதாரங் காட்டித் தமது நிலையைப் பாதுகாக்க முயலும் மக்களை உயிரில்லாப் பாவைகளாக்கிவிடும் என நம்புகிறோம். இடைக்காலத்தில் சைவ நெறியிற் புகுத்தப்பட்ட வைதீக மரபுகளைக் களைந்தெறிவதே ஒன்றே குலம் ஒருவனே தேவன் என வழிபடும் சிவநெறியாளர்களின் முழுமுதற் கடவுளாகிய சிவனும் விரும்புவர். சிவன் தமிழ் மொழியை நேசிப்பவர். தமிழாற் சொன்மாலைகள் தொடுத்தும் பாடி வழிபட்ட நாயன்மார்களின் வேண்டுகோள்களைச் செவிமடுத்த இறைவன் எத்தனை அற்புதச் செயல்களைச் செய்து காட்டியுள்ளார். தெய்வ மொழியாகிய வடமொழியில் பூசை செய்தாற்றான் இறைவன் செவி சாய்த்துக் கேட்பார் என்ற போலிவாதம் இடைக்காலத்தில் ஏற்பட்டது.

வேதங்களும் அவற்றின் மரபுகளும் தோன்றுவதற்கு மிக முற்பட்ட காலத்திலிருந்தே சிவநெறி வளர்ந்து வருகின்றது என்பது மேலே காட்டிய வரலாற்றிலிருந்து தெரிகிறது. தமிழ் மொழியிற் பூசை செய்தலே வேத காலத்துக்கு முற்பட்ட சிவநெறி மரபுமாகும். மக்கள் மொழியாகிய தமிழில் பூசை நடைபெறுங்காலம் மிகத்தொலைவில் இல்லை. தமிழ் நாட்டில் அரசே முன் நின்று நடத்தும் இப்பாரிய தொண்டு அளப்பரியது. இலங்கையில் நடைபெற்ற உலக இந்து மகாநாட்டிலும் இக்கருத்து வற்புறுத்தப்பட்டது. இலங்கையிலுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட சைவக் கோயில்களில் சிவாசாரியார்கள் தமிழிலேயே பூசை செய்கின்றனர். சில பெரிய கோயில்களில் மட்டுமே வைதீக மரபு இன்னமும் காணப்படுகின்றது. மரணக் கிரியைகளில் மறையோர் பங்குபற்ற மாட்டார்கள். தூரத்தில் நின்று கல்லெறிவதே அவர்கள் வழக்கம் போலும்.

இத்தனை சர்ச்சைக்கும் காரணம் சைவத் திருமுறைகள் என்று மிலா அளவுக்கு இன்று சைவ மக்களின் அன்றாட வாழ்க்கை நெறிகளுடன் பின்னிப் பிணைந்து நிற்பதே. சைவ மக்களுள் தீண்டாதவர் என மேல் வருணத்தாரால் தள்ளி விடப்பட்ட மக்கள் இன்று இலவசக் கல்வியின் பயனாய் பாடசாலைகளில் தாம் கட்டாயமாகப் படிக்கும் "சைவநெறி" மூலம் சிவனைக் கானுகின்றனர். ஆகம முறைப்படி கட்டப்பட்ட கோயில்களில் கடவுளாற் படைக்கப்பட்ட குழந்தைகள் செல்லக் கூடாது என விதிக்கப்பட்ட சட்டங்கள் உதறித் தள்ளியெறியப்பட்டன. "இந்து சமயம்" என்ற போர்வையில் ஊடுருவலானவைதீகக் கருத்துக்கள் இலங்கை முழுவதிலும் வழக்கிலிருக்கும் "சைவ நெறி"யினால் களைந் தெறியப்பட்டு விட்டன.

எனவே இந்த நூற்றாண்டு முடிவதற்கிடையில் சிவநெறி மரபுகளும் சித்தாந்தக் கோட்பாடுகளும் இலங்கை வாழ் இருபது இலட்சம் சைவ மக்கள் மத்தியில் வேரூன்றிவிடும். அவர்கள் ஒவ்வொருவரும் சமயத் தலைமை பெறும் மக்களாகும் தகைமை பெறுவர். எனவே மனிதனின் ஆன்மீகப் பண்பாட்டுக்குக் கோயிற் கிரியைகளிலும் மிக முக்கியத்துவம் வாய்ந்த மரணக் கிரியைகளில் திருமுறைகள் ஓதப்பட்டு மனிதனை நல்வழியில் நடத்தும். இதனைத் தடுக்க எவராலும் முடியாது. நாமெல்லோரும் கூலிக்காகவே உழைக்கிறோம்.

அரசாங்க சேவையிலுள்ளவர்கள் கூலி பெறாவிட்டால் எவருமே வேலைக்குச் செல்ல மாட்டார்கள். திருமுறைகளில் நாட்டிலே கோயில்களில் ஓதுவாரைக் கொண்டு ஓதுவித்த சோழப் பெருமன்னர் அவர்களின் வாழ்க்கைக்குக் கூலியாக மானிய நிலங்களை வழங்கினர். கோயிற் பூசகர் கூடக் கோயில்களில் கூலிக்காகவே மந்திரம் ஓதுகின்றனர். பலன் கருதாது சேவை செய்யும் மக்கள் மிகச் சிலரே. மந்திரங்கள் மிகச் சிலரே நிலைமை இப்படியிருக்க, சைவத் திருவாளர் திரு. வே. சின்னத்துரை அவர்கள் மரண வீட்டில் கூலிக்காகப் பாடுகின்றனர் எனக் கேலி செய்வது கண்டிக்கப்பட வேண்டியது. மரண வீட்டில் மனங்கலங்கிய நிலையில் இருக்கும் சைவ மக்களின் மனதைச் சாந்தப்படுத்தவே உருக்கமான முறையில் வல்லாராற் பாடப்படுகின்றன. பாடல்களை ஓதும் ஓதுவார்கள் சிறந்த மெய்யடியார்களே.

மண்ணுலகத்தினிற் பிறந்த எம் எல்லோரதும் வாழ்க்கை புனிதமானது இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ என்பது எமக்குத் தெரியாது. காலையெழுந்தவுடன் முகங்கழுவித் திருநீற்றை நெற்றியில் சாத்திச் சிவ, சிவ என்று ஓதும் பத்திலட்சம் சைவத் தமிழ் மக்கள் இன்று மலையகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மரணமடைந்தவரை நீராற் குளிப்பாட்டித் திருநீறு சாத்திச் சிவ, சிவ என்றோதிப் பெட்டியில் அடைத்துக் குளியிற் புதைத்துவிடும் எமது சைவ மக்கள் வேதங்களை அறியார், ஆகமங்களை அறியார் சில திருமுறைப் பாடல்களை மட்டும் அறிந்த ஓதுவர் இது ஒரு புனிதமான மரணக் கிரியையல்லவா? **"முன்பிருந்ததோர் காரணத்தாலே மூடரே பொய்யை மெய்யெனலாகுமோ"** என்ற பாரதியாரின் நூற்றாண்டில் வாழும் நாம் இனிமேலாவது பொருத்தமற்றவிடத்து நூலாதாரங்களைக் காட்டி எம்மையே ஏமாற்றிக்கொள்ள முற்படாதிருப்போமாக.

**திருச்சிற்றம்பலம்**

**மறைந்த பேராசிரியர்.ஆ.சதாசிவம்**
**நவம்பர் 1982**
**வீரசேகரி வாரவெளியீடு**
**07.11.1982 இலும் வெளியிடப்பட்டது**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரியபுராணம்: பத்தராய் பணிவார்கள் – தொகையடியார்கள்



சிவத்திரு.
பா.சிவமாதவன்
புதுக்கோட்டை

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவனாக திகழக் கூடிய இறைவன். உயிர்கள் உய்யும் பொருட்டு, பல்வேறு நிலைகளில் இறங்கி வந்து, அருள்செய்து கொண்டிருக்கிறான். தனி முதலாக விளங்கக் கூடிய தாயுமானவன் தம் அடியார் புகழ் உலகெலாம் அறிந்து, உயர்நிலை அடைய எண்ணி ஆலால சுந்தரரை இங்கு அவதரிக்கச் செய்தார், என்பது திண்ணம்.

அறுபத்துமூன்று நாயன்மார்கள் தவிர்த்து, ஒன்பது தொகையடியார்களையும் சிறப்பாக சைவம் கொண்டாடுகிறது.

**தொகையடியார்கள்**

1. தில்லைவாழ் அந்தணர்கள்
2. பொய்யடிமை இல்லாத புலவர்கள்
3. பத்தராய்ப் பணிவார்கள்
4. பரமனையே பாடுவார்கள்
5. சித்தத்தை சிவன்பாலே வைத்தார்கள்
6. திருவாரூர் பிறந்தார்கள்
7. முப்போதும் திருமேனி தீண்டுவோர்
8. முழநீறு பூசிய முனிவர்கள்
9. அப்பாலும் அடிச்சார்ந்தார்

ஒன்றுக்கு மேற்பட்ட ஒரு கூட்டத்தினர் அல்லது குழுவினைத் தொகுத்துச் சுட்டுவதைத் தொகை அடியார்கள் என்பர். இவர் இன்னார் என்று குறிப்பிட்டுச் சொல்ல இயலாத வேறு பலரையும், தம் காலத்து முன்பும், பின்பும் வாழ்ந்தவர்களையும், வரவிருப்பவர்களையும் போற்றும் நோக்கில் தொகையடியார் வணக்கத்தைச் சுந்தரர் மேற்கொண்டுள்ளார்.

அப்பேற்பட்ட தொகையடியார்களில் **"பத்தராய் பணிவார்கள்"** பற்றிய செய்திகளைக் காண்போம். சுந்தரமூர்த்தி பெருமான் "பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்" எனக் குறிப்பிடுகிறார். இந்த இடத்தில் நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். நாம் தற்பொழுது **" பக்தி"** என்ற சொல்லை அதிகமாகப் பயன்படுத்தி வருகிறோம். **"பக்தர்"** என்றும் குறிப்பிடுகின்றோம் ஆனால் இது பிழை என்பதை தொல்காப்பியர் நமக்கு உரைக்கின்றார்.

அதாவது, மொழி இடையில் ஒரு மெய் தன்னோடும் பிற மெய்யோடும் சேர்ந்து வருவதை **"மெய்மயக்கம்"** என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். க,ச,த,ப எனும் நான்கு மெய்களும் தம்மொடு தாம் மட்டுமே மயங்கி வரும். இதனை உடனிலை மெய்மயக்கம் என்று நன்னூலார் குறிப்பிடுவார். இவ்விதிகள், தமிழ் மொழியின் அமைப்பை தொல்காப்பியர் காலத்திற்குப் பின்பும் பன்னெடுங்காலமாகச் சிதைந்து விடாது காத்து வந்துள்ளன. தமிழில் பிறமொழிச் சொற்கள் குறிப்பாக வடமொழிச் சொற்கள் வந்து கலக்கும் போது அவற்றை ஏற்றுக்கொள்ள இவ்விதிகள் இடம் தரவில்லை. சான்றாக க,ச,த,ப ஆகிய மெய்களை அடுத்து அம்மெய்களே வர வேண்டும்.

**"பக்தி"** என வருதல் கூடாது, **"பத்தி"** என்றே வரல் வேண்டும். தொல்காப்பியரின் காலத்திற்குப் பிறகு சங்ககாலம் தொட்டுத்தோன்றிய பிற்காலத் தமிழ் இலக்கியங்களில் வடமொழிச் சொற்கள் கலந்து வரவே, அவை தொல்காப்பிய விதிக்கு புறம்பானவை என்று சொற்களை மாற்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாகச் செய்திகள் இருக்கிறது. இதனை குறிப்பிடுவதற்கான காரணம், நம்மில் சிலர் திருமுறைப் பாடுகையில், அப்படியே பாடாமல் சொற்களை மாற்றிப் பாடுகின்றோம். அருளாளர்களின் வாக்கை மாற்றுவதற்கு நமக்கு ஒருபோதும் உரிமையில்லை. அந்தத் தவற்றை நாம் செய்யக் கூடாது. திருமுறை ஆசிரியர்கள் தெளிவாகவே பாடுகின்றனர்.


**"பத்தனாய்ப் பாடமாட்டேன்"- அப்பர்**
**"பத்தர் சூழப் பராபரன்"- மாணிவாசகர்.**
**"பத்தினி பத்தர்கள்"-திருமூலர்**

இனி பத்தர்களைப் பற்றி நம்பியாண்டார் நம்பிகள் கூறியதைப் பார்ப்போம்.

**"அரசினை ஆருர் அமரர் பிரானை அடிபணிந்திட்டு**
**உரைசெய்த வாய்தடு மாறி உரோம புளகம் வந்து**
**கரசர ணாதி அவயங் கம்பித்துக் கண்ணாருவி**
**சொரிதரும் அங்கத்தி னோர்பத்தர் என்று தொகுத்தவரே."**
**(திருத்தொண்டர் திருவந்தாதி)**

அதாவது உடல் நிலத்திற்படிய வீழ்ந்து இறைவனது திருவடியை வணங்குதல், அன்பினால் நாக்குழற பெருமானது புகழ்தனை எடுத்தோதுதல், உடம்பெங்கும் மயிர்க்கூச் செறிதல் கைகால் முதலிய உறுப்புக்கள் தேயவும் அன்பினால் நடுங்கல் கண்களிலிருந்து அன்பினால் கண்ணீர் சொரிதல் போன்றவை பத்தர்களின் பண்பு எனக் குறிப்பிடுகிறார். மேலும் பத்தியின் சிறப்பை மணிவாசகர் இரண்டே வரிகளில் குறிப்பிடுகிறார். திருவண்டப்பகுதியில் வருகின்ற **"சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க பத்தி வலையிற் பாடுவோன் காண்க"**

மிகவும் அற்புதமான வரிகள் இவை. சித்தத்தால் எட்ட முடியாதவனே ஆயினும் அன்பர்களின் பத்தி என்ற வலையில் தானே வந்து அகப்பட்டுக்கொள்வான் என்கிறார். தன்முயற்சியால் தேடிச் செல்வதை சித்தமும் செல்லா என்ற தொடர் குறிக்கின்றது. இறைவனை ஒருபோதும் தேடி பிடிக்க முடியாதல்லவா அவன் அருளால் தான் அவனை வணங்க முடியுமென திருவாசகம் தெளிவுபடுத்துகிறது. பத்தி வலை விரிய விரிய கருணையாளன் தானே அன்பிருப்பதால் அகப்படுகிறான். மேலும் பத்தராய்ப்



பணிவார்கள் புராணத்தில் தெய்வச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகையில், ஈசனுக்கு அன்பு கொண்டவராக இருந்தால், அவர்களைப் பார்த்ததும் எப்பேற்பட்ட சிறப்புடையவர்கள் என கூறி, மிகவும் விருப்பம் கொண்டு (குதூகலம்), ஆசையினாலே தாய்ப்பசுவிடம் கன்று போவது போல், அடியாரிடம் சென்று பணிவான இனிய மொழிகளை பேசுவார்கள் என்கிறார். அப்பாடல்,


**"ஈசருக்கே யன்பானார் யாவரையுந் தாங்கண்டால்**
**கூசிமிகக் குதுகுதுத்துக் கொண்டாடிய மனமகிழ்வுற்று**
**ஆசையினால் ஆவின்பின் கன்றணைந்தாற் போலணைந்து**
**பேசுவன பணிந்தமொழி இனியனவே பேசுவார்."**
**(பெரியபுராணம்)**

நாம் எல்லாம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதை மிகச் சிறப்பாக இப்பாடல் விளக்குகின்றது. இறைவனை எந்த நேரத்திலும் நினைக்க வேண்டும். எந்த செயலையும் அவன் நினைப்போடு செய்ய வேண்டுமென்பதை பின்வரும் பெரியபுராணப்பாடல் வழிகாட்டும்.

**"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்**
**மென்றாலுந் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்**
**மன்றாடு மலர்ப்பாதம் ஒருகாலு மறவாமை**
**குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்**
**(பெரியபுராணம்)**

இதனையே திருஞானசம்பந்தப் பெருமானும் திருவாவடுதுறைப் பதிகத்தின் ஒன்பதாவது பாடலில், **"உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின், ஒண்மலர் அடியலால் உரையாது என்நா"** எனக் குறிப்பிடுகிறார். நிறைவாக நாம் எப்படி இறைவனிடம் அன்பு செலுத்த வேண்டும், அடியார்களை எப்படி பார்க்க வேண்டும் என்பதை பத்தராய்ப் பணிவார்கள் மூலம் அறிய முடிகிறது. எனவே நாம் உண்மையான பத்தி செய்வோமேயானால், முத்தி நிச்சயம் கிட்டும்.

**திருச்சிற்றம்பலம்**



# சிவபூமியில் சிவனைத் தேடி -

## கி.மு 300 நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர் கிராமத்தில் குடி கொண்ட வெல்லாவெளி கோயில்தீவு ஆதிகாலச் சிவன் கோயில்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

**"மேதிதோய் குளங்களெல்லாம் வீரப்போர் வரால்மீன் பாயும்
ஓதிதோய் மலர்களெல்லாம் ஒலிப்பக மாதர் கண்கள்
நீதிதோய் வன்னிமைக்கு நிகரில்நா தனைநா டென்பர்
வீதிதோய் வெல்லவூராம் விழுமிய சரிதம் கேளீர்."**

**மண்டூர் மு. சோமசுந்தரம்பிள்ளைபுலவர் - (1964)**

மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசங்களில், பண்டைய வரலாறுகளுடனும், பல தொல்லியல் எச்சங்களுடனும், நாட்டார் கலைவடிவங்கள், நாட்டுப்புறவழிபாடுகள், என்பவற்றுடன், இயற்கை எழில் பொழியும் வாவி ஆறைத் தொட்ட ஆறும், சதுப்பு நிலங்களும், மேய்ச்சல் நிலங்களும் மலைப்பாறைகளும் ஆயிரம் விழுதுகள் தாங்கிய ஆலமரமும், காடுகளும், வயல் வெளிகளும், எருமைகளும், பசுக்களும், கோயில்களும், குடியிருப்புக்களும் ஒருமித்து மருதம், முல்லை, குறிஞ்சியெனற் மூவகை நில அமைப்புக்களை, இயற்கையாகக் காட்டி நிற்கும் அழகிய, இடம் வெல்லாவெளிப் பிரதேசமாகும்.

வெல்லாவெளி

இப்பிரதேசம் மட்டு மாநகரின் தெற்கு நோக்கி சுமார் 33 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. களுவாஞ்சிக்குடியிலிருந்து பட்டிருப்பு பாலத்தினை ஊடறுத்து கோயில் பேரைதீவு ஊரின் ஊடாகச் சென்றடையலாம். வெல்லாவெளிப் பிரதேசம் அம்மன்குளம், நாதனை, கோயில்தீவு, குளத்துவட்டை என்னும் நான்கு சிறுசிறு குடிசனங்களைக்



கொண்டதாக காணப்படுகின்றது. இதில் கோயில் தீவில் இருந்த சிவனாலயமே மிகப்புராதனமானது. போர்த்துக்கீசர் காலத்தில் அழிக்கப்பட்டு, இறந்த நிலையில் ஓர் சில சுவடுகளைத் தாங்கி நிற்கும் கோயிலாகத் திகழ்கின்றது.

### திருத்தலவூரின் வரலாறு

வெல்லாவெளி பிரதேசத்தின் சரித்திரத்தை அறிந்துகொள்வதற்கு மட்டக்களப்பு **'பூர்வ சரித்திரம்'** எனும் நூலும், நகரம் எழுதிய கல் என்று, இக்கிராமவாசிகளால் அழைக்கப்படும் குடைவரைக் கல்வெட்டும் முதன்மையும் முக்கியத்துவமும் பெறுகின்றது.

மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தை மூலமாகக் கொண்டு ஆராயும் பொழுது கி.பி 11ஆம் நூற்றாண்டில் **"நாதனை"** எனும் பெயரால் அழைக்கப்பட்டமை பதிவாகியுள்ளது. மட்டக்களப்பின் ஆட்சியாளனாக இருந்த மதிசுதன் வரலாற்றில் இவ்விடயம் வருகின்றது. கி.பி 13ஆம் நூற்றாண்டில் மாகோன் ஆட்சிக் காலத்தில் (1215 - 1255) உருவாக்கப்பட்ட நாடுகாடுப்பற்றின் வடக்கு எல்லையாக நாதனை குறிப்பிடப்பட்டுள்ளது. போர்த்துக்கீசர் காலத்தில் முதன் முதலில் தயாரிக்கப்பட்ட தோம்பு எனப்படும், காணிப்பதிவேட்டில் நாதனை, வேலா வெளிக்கண்டம் என்று பதிவு செய்யப்பட்டதனைத் தொடர்ந்து, அதன் பின் வந்த ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் தங்களது ஆவணப் பதிவேட்டில் வேலாவெளியை, வெல்லாவெளி எனக் குறிப்பிட்ட காலம் முதல் அப்பெயரே இப்பிரதேசத்திற்கு நடைமுறையில் வந்தது.

ஒரு சமூகத்தின் பண்டைய இருப்பை அறிய உதவும் தொல்லியல் சான்றுகளில் கல்வெட்டும் ஒன்றாகும். வெல்லாவெளியின் மலையொன்றிலும், பெருங்கற்பாறை யொன்றிலுள்ள குகையொன்றிலும் இரு சாசனங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றின் ஒன்றிலே **'பறுமகன் ஸமுத'** என்று எழுதப்பட்டுள்ளது. இதை ஆராய்ந்த வரலாற்றுப் பெருந்தகை சி.பத்மநாதன் அவர்களும், இந்திய நாட்டைச் சேர்ந்த வரலாற்றுப் பேராசிரியர்களும் இலங்கைப் பிராமிச் சாசனங்களில் கையாளப்படும் இச்சொல், தமிழ் சொல்லின் மாற்று வடிவம் என்று குறிப்பிடுவதோடு,



இற்றைக்கு 2100 வருடங்களுக்கு முன்னர் வெல்லாவெளியிலே தமிழ்மொழி நிலவியமைக்கு, அது ஆதாரமாகின்றது என்று குறிப்பிடுகின்றனர். இருப்பினும் இக்கல்வெட்டின் காலம் கி.மு 300 வருடங்களுக்கு முற்பட்டது என பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் "இலங்கைத் தமிழர் வரலாறு" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆக வெல்லாவெளிப்பிரதேசம் ஈழத்தமிழரின் ஆதிக்குடியிருப்பை ஆணித்தரமாக உறுதிப்படுத்தியுள்ளமையை கவனிக்கமுடிகின்றது.

### திருத்தல வரலாறும், புராணக்கதைகளும்

கோயில்தீவு என்பது வெல்லாவெளிப் பிரதேசத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள கிராமமாகும். இங்குதான் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட புராதன சிவனாலயம் அமைந்திருந்தது. நாதனைக்குப் பிற்பட்ட குடியேற்ற கிராமமாக கோயில் தீவு அமைந்திருந்தாலும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களோடு விளங்கி இன்று மறைந்துவிட்ட சிவனாலயமாகிவிட்டது. ஆனால் இன்றும் இக்கோயில் அமைந்திருந்த காணியை கோயில்வளவு என்றே அழைக்கின்றனர். இக்கோயிலில் அருள்புரிந்த மூலமூர்த்தி சோமசுந்தரர் எனும் பெயரால் போற்றப்பட்டுள்ளார். ஊரின் கிழக்குப் புறமாக உச்சந்தீவு என்னும் வயல்பரப்பைத் தொட்டதாக அமையும், வாவித் தொடுகையை, இத்தலத்தின் தீர்த்தமாகக் கொண்டுள்ளனர். இன்றும், **"உச்சந்தீவு தீர்த்தக் கரையும், சோமசுந்தரர் இறக்கத்தடியும்"** என்று இக்கிராமவாசிகள் அழைத்தும் வருகின்றனர்.

இத்திருக்கோயிலின் வரலாற்றினை நோக்கும் போது, போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட இச் சிவனாலயம் குறித்த இருப்பிடச்சான்றைத் தவிர, வேறு எந்த இலக்கியச்சான்றுகளும் கையில் இன்று வரை கிட்டவில்லை. ஆதலால் தொல்லியல் நோக்கிலேயே, இக்கோயிலின் இருப்பைத் தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட சிவனாலயத்தின், கருங்கல்லினால் செதுக்கப்பட்ட கதவு நிலைகள், வெல்லாவெளிப்பிள்ளையார் கோயிலில் பொருத்தப்பட்டு இருப்பதனை அவதானிக்கலாம். அத்துடன் பரந்தபீடக்கல், ஆசனக்கல், கோயில் வளவின் தென்கிழக்கு மூலையில் அழிபாடுற்றுக் கிடக்கும் பெரிய மரக்கொட்டு பதித்து சுற்றிவரச் சதுர அமைப்பில் கட்டப்பட்டிருந்த தீர்த்தக்கிணறு, அண்மையில் இவ்விடத்தில் தொலைத்தொடர்பு கோபுரம் நிறுவுவதற்காக நிலத்தை அகழ்ந்த போது, நிலத்தின் அடியில் இருந்து கிடைத்த சிதைந்த பல கற்துண்டங்கள் என்பன கோயில்தீவில் ஒரு சிவனாலயம் இருந்தமைக்கான தடயங்களாக எடுத்துக் கொள்ளமுடியும்.

இச்சிவனாலயத்தோடு தொடர்புடைய செவிவழிக்கதை யொன்றும், இவ்வூர் மக்களிடையே காலம்காலமாக நிலவி வருகின்றது. போர்த்துக்கீசர் கோயில்களைக் கொள்ளை யிட்டும், அழித்தும் வந்த போது இவ்வாலயத்தின் பெறுமதியான பொருட்களையும், சிலைகளையும், கிடாரம் ஒன்றில் இட்டு சிவன் கோயிலுக்கு நேராக உள்ள நாதனை ஆறு எனும் பூவல் ஆற்றில் போட்டதாகவும் அதையாரும் எடுக்கக் கூடாது என்ற காரணத்தினால், அவற்றைப் பூதம் காவல் செய்வதாக வதந்தியும் பரப்பப்பட்டதனால், அவ் ஆற்றில் எவரும் துணிந்து இறங்குவதில்லை என்றும் கூறப்பட்டு வருகின்றது. இவ்விடத்தை இன்று கிடாரம்



போட்டபள்ளம் என்றும் அழைத்து வருகின்றனர்.

இலங்கையில் உள்ள பண்டைய சிவாலயங்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு வரும் திரு.என்.கே.எஸ் திருச்செல்வம் அவர்கள் வெல்லாவெளி கோயில் தீவு சிவன் கோயில் பற்றி, ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் (29.04.2012, 05.05.2012) எழுதியதன் சில முக்கிய பகுதிகள் வருமாறு.

**"பல நூறு வருடங்களுக்கு முற்பட்டுச் சிறப்புடன் விளங்கிய சிவன் கோயில் இங்கு அமைந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. இராசமலை எனப்படும் றஜகலப் பகுதியிலிருந்து கிழக்கு நோக்கி ஓடும் சிற்றாறுகள் இரண்டும் ஒன்று சேர்ந்து நாதனை ஆறு என்ற பெயரில் மட்டக்களப்பு வாவியில் கலக்கும் சங்கமத்திற்கு சற்றுத் தூரமாக இச்சிவன் கோயில் அமைந்திருந்தது.**

**மிகப்பழங்காலத்தில் இங்கு சிவ வழிபாடு நிலவியுள்ளது. இந்தியாவைச் சேர்ந்த கொங்கண முனிவர் இலங்கைக்கு தலயாத்திரை வரும் போது தான் கொண்டு வந்த இலிங்கங்களில் ஒன்றை இப்பகுதியில் வைத்து, எழுந்தருளச் செய்து வழிபட்டு வந்ததாகவும், இப்பகுதியில் வாழ்ந்த ஆதி வேடர் குலத்தவரால் தொடர்ந்து, இந்த இலிங்கம் பூசிக்கப்பட்டுவந்ததாகவும் கூறப்படுகின்றது. கி.பி 10 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 13 ஆம் நூற்றாண்டு வரையான காலங்களில் சிறப்புற்றிருந்த கோயில்களில் இதுவும் ஒன்று. பூபால கோத்திர வன்னிமைகளின் ஆட்சிக்குட்பட்டிருந்த இப்பகுதியில், அவர்களாலும் இக்கோயில் பராமரிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. மட்டக்களப்புப் பதியிலிருந்த ஏராளமான இந்துக் கோயில்கள் ஐரோப்பியர் காலத்தில் அழிக்கப்பட்டன. இவற்றில் கோயில்தீவு சிவன் கோயில் ஒன்றாகும்."**

இதேபோல் இக் கோயிலின் இருப்பு தொடர்பான தேடல்களை வெல்லாவெளியைச் சேர்ந்த கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்கள் 'வெல்லா வெளி வரலாறும் பண்பாடும்' என்ற நூலில் பதிவு செய்துள்ளார். மற்றும் கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இளம் வரலாற்றுத்துறை விரிவுரையாளர் நிலாந்தி பொன்னுத்துரை அவர்களும்





'வெல்லா வெளிக்கிராமத்தின் வரலாறும் தொல்லியல் எச்சங்களை ஆவணப்படுத்தலும்' என்ற கட்டுரையில் இக் கோயிலின் வரலாற்றை ஆழப்பதிவு செய்துள்ளார். தற்போது இவைகளெல்லாம் இக்கோயிலைப் பற்றி அறிந்து கொள்ளக் கூடிய இலக்கிய ஆதாரங்களாகும்.

கிழக்கிலங்கையில் கலிங்கமாகோனின் செல்வாக்கு மோலோங்கிய காலகட்டத்தில் கொக்கட்டிச்சோலை, மண்முனை, ஆரையம்பதி, கோயில்போரைதீவு, திருக்கோயில் ஆகிய இடங்களில் அமைந்துள்ள கோயில்களில் வீராகமச் செல்வாக்கும், வீரசைவபத்தி மரபுகளும், கோயில் தொண்டூழியமுறைகளும், குடிவழக்கு மரபுகளும் செல்வாக்குப் பெற்றிருந்தன. இன்றளவும் கொக்கட்டிச்சோலை சிவன்கோயில் வீரசைவமரபுகளைத் தழுவியே நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் மாகோன் காலத்திற்குட்பட்ட வெல்லாவெளி கோயில்தீவு சிவன் கோயிலிலும், வீரசைவநெறி தழைத்தோங்கியிருக்க வேண்டும். இதனை தற்கால வெல்லாவெளி கிராம மக்களின் சமயப்பண்பாட்டு அம்சங்களினூடாக அவதானித்துக் கொள்ளலாம்.

எது எவ்வாறாயினும் சிதைந்த சிவனாலயங்களை மீள கட்டியெடுப்பது சிவபுண்ணியமாகும். புராதன சோமசுந்தரப் பெருமானின் திருவருள் மீண்டும் வெல்லாவெளி மண்ணின் கோயில்தீவில் நிலைகொள்ள, இப்பிரதேசத்தாரின் மனத்திலும் வாக்கிலும், செயலிலும் அப்பொருமானின் திருவருள் கைகூட வேண்டும்.

**ஊர் பரந்த உலகின் முதல் ஆகிய ஓர் ஊர் இது - என்னப் பேர் பரந்த
பிரமாபுரம் மேவிய பெம்மான் - இவன் அன்றே! - சம்பந்தர் தேவாரம்.**

**திருச்சிற்றம்பலம்**

# புலம்பெயர் சூழலிலே சைவசமயம் எதிர்கொள்கின்ற
# சவால்களும் வாய்ப்புக்களும்

பாகம் 3



**முற்பகுதிச்சுருக்கம்:** சிவனை முழுமுதல் கடவுளாகக் கொண்ட வழிபாட்டு முறையே சைவசமயம் என்பதை **"தென்னாடுடைய சிவனே போற்றி"** என்னும் மாணிக்கவாசகரின் வரிகளை மேற்கோள்காட்டி வியாக்கியானம் செய்யப்பட்டது. **"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்"** என்னும் திருமந்திரப்பாடலை ஆதாரமாக்கி சைவசமயம் ஒரு வாழ்க்கைமுறை என்பது பதியப்பட்டது. புலம்பெயர்சூழலிலே சைவசமயம் எதிர்கொள்கின்ற சவால்களையும் வாய்ப்புக்களையும் வெளிக்கொணரவேண்டியதன் நோக்கம் வரையறுக்கப்பட்டது. அந்நியப் படையெடுப்புக்கள், களப்பிரர்கள், பல்லவர்கள் போன்றோரின் வருகை, சமணம்-பௌத்தம் போன்ற பிறசமயப்பரவல், பத்தி இயக்கம், கட்டிடக்கலையில் ஏற்பட்ட திருப்புமுனை என்பவை அலசப்பட்டன. குறிப்பாக, சைவசமயத்தின் கட்டிட மரபில் பல்லவக்கட்டிடக்கலை ஏற்படுத்திய பெறுமதியான மாற்றம் விவரிக்கப்பட்டது. படையெடுப்பின் மூலம் மண்ணைப் பிடிக்க வந்தவர்களை, மண்ணின் மரபுகளை மாற்ற முனைந்தவர்களை சைவசமயம் கையாண்ட பாங்கு விவரிக்கப்பட்டது. **"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந் தொழும்"** என இறைவனுக்கு வரைவிலக்கணம் வகுக்கின்ற பண்பாட்டின் பலம் சுட்டிக் காட்டப்பட்டது. அழிக்க நினைத்தவர்களையும் அரவணைக்கும் சைவசமயத்தின் உள்ளார்ந்த பண்பு அடையாளப்படுத்தப்பட்டது.

புலம்பெயர்சூழலிலே சைவசமயம் எதிர்கொள்கின்ற சவால்களையும் வாய்ப்புக்களையும் ஆராய்வதற்கான தேடலே இக்கட்டுரைத் தொடராகும். நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் காண்பதற்கு வரலாறு துணையாகுமல்லவா. அதனாலேயே கடந்தகாலங்களைப் பார்த்துவருகின்றோம். அந்தவகையிலே, பத்தி இயக்கத்துக்கு அடுத்துவந்த காலனித்துவக் காலப்பகுதியை இந்தப் பகுதியிலே பார்க்கவுள்ளோம்.

ஒரு நிலப்பரப்பினைப் புரிந்துகொள்வதற்கு வரலாறு துணையாகின்றது. அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வுமுறை, வழிபாட்டுமுறை, பழக்கவழக்கம், பண்பாடு, சமூகச்சூழல் என்பவற்றை வரலாறு மூலமாக அறிந்துகொள்ளலாம். தொல்லியல் சான்றுகளே வரலாற்றின் சாட்சிகளாகும். கல்வெட்டுகள், நாணயங்கள், கட்டுமானச்சிதைவுகள் போன்றவற்றை அந்தவகையிலே குறிப்பிடலாம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் வரலாற்றுச் சான்றுகள், ஒப்பீட்டளவில், குறைவாகும். மேற்குக்கரையில் சிலாபம், புத்தளம், மாதோட்டம் பகுதிகளிலேயும், கிழக்குக்கரையிலே கதிரவெளி, மத்தியபகுதியிலே மன்னம்பிட்டி, தெற்கிலே வளவகங்கைப் பள்ளத்தாக்கு, வடக்கிலே வல்லிபுரம், வரணி, கந்தரோடை போன்ற பகுதிகளிலே காணப்பட்ட தொல்லியல் சான்றுகள் ஆதிச்சநல்லூர், கீழடி, சிவகளை உள்ளிட்ட தமிழகத் தொல்லியல் சான்றுகளுடன் ஒத்தவையாகச் சொல்லப்படுகின்றன. அவை சைவத்தமிழ் மண்ணின் வரலாற்று ஆதாரங்களாகும். ஆனாலும் அத்தகைய வரலாற்றுச் சான்றுகளிலே எஞ்சியிருப்பவை எவ்வளவு என்பதே மிகப்பெரிய கேள்வியாகும். தொல்லியல் சான்றுகளைப் பாதுகாப்பதற்கு பூர்வாங்கமான அரசகட்டமைப்பு அவசியமானதாகும். சைவத்தமிழரிடம் அரசு கிடையாது. அதனாலேயே தொல்லியல் சான்றுகள் அச்சுறுத்தலுக்கு உட்படுகின்றன. திட்டமிட்டவகையிலே அழிக்கப்படுகின்றன.

அந்தவகையிலேயே, இலங்கையின் சைவத்தமிழ் வரலாற்றை திட்டவட்டமாக வரையறுப்பது கடினமாகின்றது. கைலாயமாலை, வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை, கந்தபுராண கலாசாரம் போன்ற நூல்கள் வரலாற்றுத் தகவல்களைக் கொண்டிருக்கின்றன. உயர் கல்விப்பீடங்கள் வழியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் உள்ளன. அவைதவிர வாய்வழியாகச் சொல்லப்படுகின்ற கதைகளும் காணப்படுகின்றன.

காலனித்துவ ஆக்கிரமிப்புக்களினால் சைவசமயத்தவரின் மண் பறிபோனது. கந்தபுராண கலாசாரம் களையிழந்தது. சைவத்தமிழ் வாழ்விடங்கள் பாதிக்கப்பட்டன. சைவத்தமிழரின் நிலமோ குறுகியது. எண்ணிக்கையோ குறைவு. அதனால், காலனித்துவ ஆட்சியாளர்களின் அடாவடித்தனங்கள், பாரியதாக்கங்களை ஏற்படுத்தின. பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கீசரின் வருகையுடன் காலனித்துவம் ஆரம்பமாகியது. போர்துக்கீசரிடமிருந்த ஆட்சியை ஒல்லாந்தர் கைப்பற்றினர். அதன்பின்னர் ஆங்கிலேயர் ஆக்கிரமித்தனர். பத்தொன்பதாம் நூற்றண்டிலே ஆங்கிலேயர் வெளியேறினர்.



**நியூசிலாந்து சிற்சபேசன்**

வர்த்தக நடவடிக்கை என்னும் கோதாவிலேயே போர்த்துக்கீசர் வந்தனர். கடற்கரையை அண்டிய பகுதிகளில் தங்கியிருந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஆரம்பங்களிலே போர்த்துக்கீசர் நேரடியாக மக்களுடன் தொடர்பாடலில் இருக்கவில்லை. ஆனால், வர்த்தகம் என்னும் போர்வையில் மதமாற்றத்துக்கே வந்திருந்தனர். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் அல்லவா. அந்த வகையிலே உள்ளூரிலே காணப்பட்ட ஒற்றுமையின்மையைப் போர்த்துக்கீசர் பயன்படுத்தினர். ஆட்சியைக் கைப்பற்றினர்.

அதன்பின்னர் போர்த்துக்கீசரின் சுயவடிவம் வெளிப்பட்டது. வர்த்தகத்திலே அக்கறை காட்டவில்லை. மாறாக, மதமாற்ற முயற்சிகளை தடாலடியாக ஆரம்பித்தனர். சைவ வழிபாட்டு முறைகளை தடைசெய்தனர். சைவமரபிலே நின்றொழுகுவதைத் தடுத்தனர். சைவச் சின்னங்களை அழித்தனர். சைவ வழிபாட்டுத் தலங்களை அழித்தனர். சைவக் கோயில்களின் இடிபாடுகளைக்கூட விட்டுவைக்கவில்லை. அங்கிருந்து செங்கல் உள்ளிட்ட கட்டிடப் பொருட்களை எடுத்துச்சென்று, தேவாலயங்களை அமைத்தனர்.

போர்த்துக்கீசரின் ஆக்கிரமிப்புக்கு முன்னரேயே கத்தோலிக்க பிரச்சாரகர்கள், சைவத்தமிழ் மண்ணுக்கு வந்திருந்தனர். சைவசமயத்தவரை மதம் மாற்றுகின்ற முயற்சிகளை ஆரம்பித்திருந்தனர். ஆனாலும், ஆட்சியாளரின் ஆதரவில்லாத சூழலில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெறமுடியவில்லை. போர்த்துக்கீசரிடம் ஆட்சியதிகாரம் கைமாறிய பின்னர் மதமாற்ற முயற்சிகள் அதிஉந்துதல் பெற்றன.

போர்த்துக்கீச ஆட்சியாளர் மதமாற்றத்துக்கு ஏதுவான நிர்வாக கட்டமைப்பை உருவாக்கினர். சைவ நிலப்பரப்பை வலிந்து கிறித்துவ வழிபாட்டுப் பிரதேசங்களாக (பாரீஷ்) வகுத்தனர். கணிசமான பிரதேசங்களிலே ஃப்ரான்ஸிஸ்கன் பாதிரிமாரைப் பொறுப்பாக நியமித்தனர். மற்றையவற்றுக்கு, ஜெர்ஸ்யூட் பாதிரிமாரை நியமித்தனர். அந்தவகையிலே, கிராமம், சிறுநகரம், பெருநகரம் என சீரான ஒழுங்கிலே மதமாற்றங்களை ஆரம்பித்தனர். சைவசமயத்தவரின் வழிபாட்டு முறையை மூர்க்கத்தனமாக நிராகரித்தனர். சைவசமயத்தவர் **'பொய்யான'** கடவுளர்களை வணங்குவதாக ஏளனம் செய்தனர். **'இயேசு கிறித்துவான உண்மையான ஒரே இறைவனை'** வணங்கும்படி வற்புறுத்தினர்.



சைவக் குடும்பங்களிலே குழந்தை பிறக்கும்போது, உள்ளூர் கிறித்துவ நிலைக்கு அறிவிக்கவேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டது. பிறந்த குழந்தைக்கு ஞானஸ்தானம் செய்வதும், கிறித்துவப் பெயரிடுவதும் அவசியமாக்கப்பட்டது. அதன்பின்னர் குழந்தை வளர்ந்த பின்னர் கிறித்துவக் கல்வி நிலையங்களுக்கே அனுப்பவேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

மதமாற்றத்துக்கு கல்வி ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. தீந்தமிழ்ச் சைவமண்ணிலே கிறித்துவக் கல்விக்கூடங்கள் அமைக்கப்பட்டன. அவை மதமாற்றத்துக்குரிய களங்களாகவே உருவாக்கப்பட்டன. பைபிள் உள்ளிட்ட கிறித்துவத் தத்துவங்கள் போதிக்கப்பட்டன. கல்விக்கூடங்கள் வழியான பிரசாரத்தில் உள்ளீர்க்கப்பட்டவர்களுக்கு, உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டன.

ஒல்லாந்தரின் காலப்பகுதியில் பசுவதை மிகப்பெரிய பிரச்சினையாகியது. இறைச்சித் தேவைக்கு பசுக்களை கொல்லுகின்ற நடைமுறை காணப்பட்டது. ஆட்சியாளரின் உணவுத் தேவைக்காக ஒவ்வொரு வீட்டிலிருந்தும் பசு கொடுக்கவேண்டும் என்னும் நிபந்தனை நடைமுறைப் படுத்தபட்டது. அதற்குக் கட்டுப்படாதோர் தண்டிக்கப்பட்டனர். பசு கொல்லப்படுவதைச் சகிக்கமுடியாத திருநெல்வேலி சுவாமி ஞானப்பிரகாசம் போன்றவர்கள் கடல்கடந்து தாய்தமிழகத்திற்குச் சென்றதாகவும் சொல்லப்படுகின்றது.

சைவநோன்புகள் கடைப்பிடிப்பவர்களைத் தண்டித்தனர். அதனால் ஆடிமறைமதி நோன்பு முடித்துச் சாப்பிட்ட வாழையிலைகளை வெளியே போடுவதற்கு மக்கள் அஞ்சினர். அன்றையகாலங்களிலே ஓலைக்குடிசைகளே அதிகமாகக் காணப்பட்டன. நோன்புக்குச் சாப்பிட்ட வாழையிலையை குடிசைத் தாழ்வாரங்களிலே மறைத்துவைக்கவேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டனர்.



5. பழைய நல்லூர்க்கந்தசுவாமி கோயில் அமைந்திருந்த விடத்தில் அமைக்கப்பட்ட கிறிஸ்தவ தேவாலயம் (முத்திரைச்சந்தி)

**"முந்தொரு காலத்தின் மூவுலகந் தன்னில், வந்திடும் உயிர்செய்த வல்வினை அதனாலே, அந்தமில் மறையெல்லாம் அடிதலை தடுமாறிச், சிந்திட முனிவோருந் தேவரு மருளுற்றார்"** என கந்தபுராணத்தை மேற்கொள்காட்டி அன்றைய சைவத்தமிழ் யாழ்ப்பாணத்தின் அடிதலை தடுமாற்ற நிலையை பண்டிதமணி. சி.கணபதிப்பிள்ளை குறிப்பிடுகின்றார்.

சைவசமயத்தவருக்கு ஞானஸ்தானம் செய்தனர். பலவந்தமாக மதமாற்றம் செய்தனர். வாராந்தம் செய்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை போன்றவை சைவசமயத்தவரின் முக்கிய வழிபாட்டுத் தினங்களாகும். அத்தகைய தினங்களில் சைவமக்கள் கூடுவதைத் தடுத்தனர். வார இறுதிநாளான ஞாயிற்றுக்கிழமையே வழிபாட்டுக்குரிய தினமாக அறிவித்தனர். ஞாயிற்றுக்கிழமை தேவாலயங்களுக்கு வரவேண்டும் என்பதைக் கட்டாயமாக்கினர். சைவசமயத்தவரின் வழிபாட்டு ஒழுங்குமுறைகளை நிராகரித்தனர். சைவமயத்தவர் திருநீறு அணிவதைத் தடுத்தனர். சிவபூசையைத் தடுத்தனர். சைவகிரியைகளை நிறுத்தினர்.

கிறித்துவத்தைப் பின்பற்றாதவர்களுக்குத் தண்டனை வழங்கினர். தேவாலயங்களிலே நடைபெறுகின்ற ஆராதனைகளிலே கலந்து கொள்ளாதவர்களை அடையாளப்படுத்தினர். உடல்ரீதியாகத் தண்டித்தனர். சவுக்குத்தடிகளாலும், இரும்புக்கம்பிகளாலும் தாக்கினர். முதியவர், பெண்கள், குழந்தைகள் என யாரையுமே விட்டுவைக்கவில்லை. அதனால், தேவாலயங்களிலே ஊரே திரண்டது. போர்த்துக்கீச மதமாற்றிகள் மகிழ்ந்தனர். சைவநிலப்பரப்பைக் துவமாக மாற்றிவிட்டதாகப் பெருமைகொண்டனர்.

ஆனாலும், கந்தபுராணகலாச்சார மண்ணிலே மதமாற்றிகளால் வெற்றி பெறமுடியவில்லை. அநேகமானோர் வெளியே கிறிஸ்துவராக நடித்தனர். வீடுகளிலே சைவசமயத்தவர்களாக வாழ்ந்தனர். சைவச்சின்னங்களை அணிந்தனர். சைவசமய வழிபாடுகளை இரகசியமாக மேற்கொண்டனர். வைரவர் சூலத்தை மரங்களிலே மறைத்துவைத்து வழிபட்டனர். அத்தகையவொரு மரபின் தொடர்ச்சியாகவே இன்றும் கூட வளவுகளிலே வைரவர் வழிபாட்டு முறையைக் காணலாம்.

இவ்வாறாகக் காலாதிகாலமாகப் பேணிவந்த சைவவாழ்க்கை முறையை சொந்த மண்ணிலேயே வாழ முடியாதர்களாக ஆக்கப்பட்டனர். அதனால் அகத்தே சைவர்களாகவும், புறத்தே கிறிஸ்துவர்களாகவும் வாழவேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டனர். காலப்போக்கில் கணிசமான எண்ணிகையிலான சைவத்தமிழர் சொந்த மண்ணிலிருந்து புலம்பெயர்ந்தனர். அடுத்துவருகின்ற பாகங்களிலே புலம்பெயர்ந்தசூழல் தொடர்பில் பார்ப்போம்.

(வளரும்)

# தென்னாட்டு நிகழ்வுகளும் படைப்புகளும்



தென்னாடு ஒன்பான் இரவுகள் (நவராத்திரி)



ஏடு தொடக்கல் - புரட்டாசி பதின்மைப் பிறைநாள்



புரட்டாசி பேரொடுக்க மறைமதி



தென்னாடு இதழ் வெளியீடு



நுழைவு தீக்கை (சமய தீட்சை) வழங்கும் விழா

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் பதின்மூன்றாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு” , சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு வண்பண்ணை தயா அச்சகத்தில் அச்சிடப்பட்டு துலை நல்லோரை ஐப்பசித் திங்கள் 3ம் நாள் நிறைமதி அன்று (20-10-2021 புதன்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம்.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 75 653 3111 | மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org